Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு-30 01 ஏப்ரல் 2006 விலை:- 07.00

மக்களின் அபிலாசை என்பது, எந்தவித ஜனநாயக-நெறிமுறைகளுக்கும், உட்படாது, மக்கள் மீது அதிகாரம் செலுத்துபவர்களின் அகங்காரமாகாது.

# தெற்கில் ஜனநாயகத் தேர்தல் - வடக்கு கிழக்கில் பாசிச ராச்சியம்

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பு பெற்ற வெற்றி தெற்கில் ஜனநாயகம் நிலவுவதையும், வடக்கில் பாசிசம் நிலவுவதையும் தெளிவாக எடுத்துக் காட்டியது.

மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய நிலைமை இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் குறிப்பிடத்தகுந்த அளவு தெற்கில் காணப்பட்டது முக்கியமான அம்சமாகும்.

"மகிந்த சிந்தனை"யில் குறிப்பிடப்பட்டிருந்த சாதாரண மக்களின் அபிலாசைகளை கருத்தில் கொண்ட எணணக்கருத்துக்கள் இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு சமாதானம் தொடர்பான நிதானமான செயற்பாடுகள், மலையக அபிவிருத்தித் தொடர்பான கரிசனை அனைத்து சமூகங்களுக்கும் பாராபட்சமற்ற சேவை என்ற நிலைப்பாடு என்பன பெரு வெற்றியை ஐக்கிய சுதந்திர கூட்டமைப்புக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் அணுகுமுறை எதிர்கட்சியான ஐ.தே.க வின் பாரம்பரியமான ஆதரவாளர்கள் மத்தியிலும் தாக்கத்தை செலுத்தியுள்ளதென்றே கூறவேண்டும்.

இலங்கையின் தென்பகுதியில் மக்கள் முன்னேற்றமடைந்து வருகிறார்கள், விழிப்புணர்வு பெற்று வருகிறார்கள் என்பதற்கு இந்த தேர்தல் முடிவுகள் சிறந்த உதாரணம்.

பாரம்பரியமான குதிரையின் மேலிருந்து மலர்களை பார்க்கும் ஆளும் வர்க்க அரசியலில இருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் வித்தியாசப்படுகின்றன.

இனங்களின் உரிமைகள், சமத்துவம் தொடர்பாக வெறுப்பூட்டும், காழ்ப்புணர்வை வளர்க்கும் கருத்துக்கள் தொடர்பாக மக்கள் சலிப்படைந்து விட்டார்கள் என்றே கூற வேண்டும்.

இலங்கையில் சில மாதங்களுக்கு முன்னால் ஜனாதிபதியாக பதவியேற்றவரின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்பதற்கு அப்பால் வேறு சமூகக் காரணிகள் நிர்ணயமாக செயற்பட்டிருக்கின்றன என்றே கூற வேண்டும். இலங்கையின் தென்பகுதி மக்கள் பத்தாம்பசலித்தனமான கருத்துக்களின் சிறையில் இருந்து விடுபட்டு வருகிறார்கள் என்பதனையே இது புலப்படுத்துகிறது. ஜனநாயகம், மனித உரிமைகள், சமூக அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்ச்சி அதிகரித்து வருகிறது.

ஆனால் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை நிலைமை தலைகீழ். தமிழ மக்களின் ஜனநாயக உரிமைகளோ, முஸ்லீம்களின் ஜனநாயக உரிமைகளோ அங்கு ஒரேயடியாக நிராகரிக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் ஒரு பல்கலைகழகத்தில், ஒரு பாடசாலையில் நிகழும் ஜனநாயகத் தெரிவுகளில கூட தலையீடுகள் நிகழ்வதோடு மரண அச்சுறுத்தலும் விடுக்கப்படுகின்றது.

பொதுவாகவே சாதாரண மக்கள் அவர்கள் எந்த இன சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி அதிதீவிரவாத நிலைப்பாடுகளை எடுப்பதில்லை. எப்போதும் அதிதீவிரவாத நிலைப்பாடுகள் ஆகக் கூடியபட்சம் 15-20 வீதத்துக்கு மேல் ஆதரவைப் பெறுவதில்லை. அதனால் தான் புலிகள் தமிழர் கூட்டமைப்பு என்ற முகமூடியை அணிந்து கொண்டார்கள். மறுபக்கம் மாற்று கருத்து, கட்சி என்று எதுவுமே வடக்கு கிழக்கில உருவாகிவரும் போது அவற்றை கடந்த இரண்டு தசாப்தங்களாகவே முளையிலேயே கிள்ளியெறிந்து வந்தார்கள். ஒரு ஜனநாயக சூழலில் இந்த புலி பாசிச சக்திகளால் சில நாட்கள் கூட தாக்குப்பிடிக்க முடியாது.

உண்மையில் சமாதான செயற்பாட்டில் ஈடுபடும் மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தார்மீக பலம் மிக அதிகமாகவே காணப்படுகிறது. மக்களின் வாக்குப்பலத்தை அவர்கள் பிரதானமாக சார்ந்திருக்கிறார்கள். ஜனாதிபதி தேர்தலிலும், உள்ளூராட்சித் தேர்தலிலும் பெருவாரியான மக்களின் வாக்குப்பலத்தினால் மக்களுக்கு சேவை செய்யும சட்டபூர்வ அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். உலக ஜனநாயக தராதரங்களில் இதனை பெற்றிருக்கிறார்கள்.

தற்போதைய இலங்கை அரசின் ஜனநாயக தாராதரங்களையும், புலிகளின் தராதரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் புலிகள் இலங்கை அரசாங்கத்துடன் ஒரே மேசையில் அமர்வதற்கு எந்த அருகதையுமற்றவர்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுபவர்கள் என்று சொல்லப்படுகின்ற புலிகள் தம்மை தமிழ மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூவி, கொக்கரித்து திரிகிறார்கள். ஆனால் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் நான்கு பேர்கூடி தாம் விரும்பிய ஒருவரை தமது தலைவராக தெரிவு செய்யும் உரிமையைக் கூட மறுதலிக்கிறார்கள. ஆசிரியர் இராசதுரை படுகொலை செய்யப்பட்டதில் அவர் ஜனநாயக ரீதியாக அதிபர் சங்கத்தின் தலைவராக இருந்ததும் ஒரு காரணமாகும்.

ஜெயதேவன், விவேகானந்தன் போன்றவர்கள் லண்டனில் ஒரு கோயிலின் நிர்வாகிகளாக இருந்ததற்காக வன்னியில் புலிகளின் சிறைகளில்

தொடர்ச்சி 02ம் பக்கம்

# தமிழ் மக்களின் மீதான ஒடுக்கு முறையின் வரலாற்றில் மட்டுமல்ல தமிழரின் போராட்ட வரலாற்றிலும் இரத்தம் தான்!

'இலட்சியம, புனிதம், தியாகம' என பல பெயர்களை அநதிஸ்த்தை அதற்குச் சூட்டிக் கொண்டாலும் உள்ளே பாதகச் செயல்களின் படிக்கட்டுக்களாகத்தான் எமது. போராட்டமும்.

நான் என்றாவது ஒரு நாள் இந்த உண்மையைக் காண நேரிடும்.

நியாயத்துக்காக குரலெழுப்ப வேணடிய நாம் பல அநியாயங்களை நியாயப்படுத்தவே பழக்கப்பட்டு விட்டோம் என்பதை உணர நேரிடும்.

**பிணங்களுடன் கிடந்து மீண்டேன்**

இரவுகள் பொதுவாக ஒரே மாதிரித்தான் இருளும் மௌனமும் துயிலும். ஆனால் அன்றைய இரவு 1987 மார்ச் 30ம் திகதிய யாழ்ப்பாணத்து இரவு அப்படி இருக்கவில்லை.

அது ஒரு கோர இரவு அது படுகோரமாகத் தமக்கு அமையப் போகின்றது என்பதை உணராமல், நாளாந்தம் கடந்து போகும் சாதாரண இரவு போலக்கருதி மறுநாளைத் தரிசிக்கத் துயில்வதற்காகத் தமது இரவு உணவைப் புசித்து கொண்டிருந்தார்கள்" அவர்கள் புலிகள் இயக்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள்.

கைதிகள் என்போர் குற்றவாளிகள். அல்லது குற்றத்துக்காக சந்தேகிக்கப் படுவோர். ஆம் இவர்களும் அத்தகைய ஒரு குற்றத்துக்கு உரியவர்களே! அது என்னவென்றால், தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டதுதான்! விடுதலைப் புலிகள் செய்த அதேகாரியம் ஏன் அவர்களாலேயே குற்றமாக்கப் படுகிறது என்றால்".

அதை விளக்க அவர்களின் பக்கவாத்தியக்காரர்களால் தான் முடியும்! சில படித்த மனிதர்களுக்கு இது மிகச் சுளுவான காரியமாக இருக்கலாம். ஆனால், ஒன்று இங்கு கைதிகளாக வைகைகப்பட்டிருந்தவர்கள் யாவரும் தமிழ் தாயின் புத்திரர்கள், ஒருவேளை இவர்களின் சகோதர சகோதரிகள் யாரும் புலிகள் இயக்கத்தில் கூட இருந்திருக்கலாம். இவர்கள் எல்லோருமே தத்தம் விடுதலை இயக்கங்களில் சேரும் போது தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் தமது உயிரையும் கொடுக்கத் தயாராகவே முன்வந்த இளைஞர்கள். தமது குடும்பம் வறுமையில் உழன்றாலும், திருமணம் முடிக்காத சகோதரிகள இருந்தாலும் மனைவி மக்கள் இருந்தாலும் சொந்த வாழ்க்கையைப் பொருட்படுத்தாமல் பள்ளிபடிப்பை சில வேளை பல்கலைக்கழகப் படிப்பையும் உதறித் தள்ளிவிட்டு ஒரு சிலர் தொழிலையும் உதறித்தள்ளிவிட்டு போராட்டத்தில் இணைந்தவர்கள்.

அவர்கள் இணையும் போது தாமும் போராட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றைத் தவிர வேறெந்த நினைப்புமின்றி எழுந்தமானமாகத் தமக்கு எட்டிய விடுதலை இயக்கங்களில் சேர்ந்தார்கள். இங்கு எமக்கு உணரக்கூடியதாக இருந்த ஒரு பிரதான விடயம் யாதெனில் 1983 ஜ"லை இனக்கலவரம் உந்தித் தள்ளிய போராட்ட வேகத்தில் விளைந்த இப் போராளிகள் அப்போராட்டத்தாலேயே குற்றவாளிகளாக நிறுத்தப்பட்ட முரண் நிலைதான்!

இக்கைதிகள் யாவரும் எப்படி இந்த சிறை முகாமில் அடைக்கப்பட நேர்ந்தது என்பதே எமது போராட்ட வரலாற்றில் ஒரு பகுதிதான் கசப்பான பகுதி.

1986 ஆம ஆண்டு தமிழ் ஆயுதப் போராட்டத்தில் புதியதொரு குணாம்சம், மிக மோசமான வடிவில் வெளிப்பட்ட ஆண்டு ஏப்ரல் மாதம் டெலோ அமைப்பின் மீதான புலிகளின் தாக்குதலுடன் இது ஆரமபித்தது. அடுத்தடுத்து புளொட், ஈ.பி.ஆா.எல்.எவ் என, ஈரோசைத் தவிர அனைத்து இயக்கங்களையும் அவ்வாண்டுக்குள் தடை செய்து முற்றுப்பெற்றது.


(ஈரோஸை சில காலம் பயன்படுத்திவிட்டு பின்னர் இயக்கத்தைக் கலைத்துவிட்டு தம்முடன் சேர்ந்து விடும்படி புலிகள் உத்தரவிட்டனர்.)

இவ்வாறு புலிகளால் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் உறுப்பினர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர். அவர்களில் பலர் இச்சிறை முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இறுதியாக 1996 டிசம்பர் 13ம் திகதி புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்க உறுப்பினர்களே இங்கு அதிகளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் 30பேர் புலிகளால் விடுவிக்கப்பட்ட பின் இந்தியாவுக்குச் செல்வதற்காக படகு ஏற்பாடு செய்துவிட்டு, அதற்காகப் புங்குடுதீவுக்கு வேன் ஒன்றில் சென்றுகொண்டிருந்த வேளை, மீணடும் புலிகளால் இடைமறிக்கப்பட்டு, பாதுகாப்பாக அனுப்பி வைப்பதாக தந்திரமாகப் பேசி, ஏமாற்றி அழைத்து வரப்பட்டு இச்சிறைமுகாமில் அடைத்து வைக்கப்பட்டவர்கள். அவர்களுடன் புலிகளால் கைது செய்து அடைத்து வைக்கப்பட்டவர்களில் ஒருவரே இச்சம

தொடர்ச்சி 2ம் பக்கம்

## மார்ச் 30 கந்தன் கருணை படுகொலை நினைவு நாள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்



## ஜனநாயகம், மனித உரிமை உறுதிப்படுத்தப்படாமல் உண்மையான சமாதானம் சாத்தியமில்லை.

வடக்கு கிழக்கில் இருந்து மாற்று தமிழ் கட்சிகளை அப்புறப்படுத்திவிட்டு அல்லது அழித்தொழித்துவிட்டு தனது ஏக ராச்சியத்தியத்தை நிறுவுவதற்கு புலிகள் முயலுகின்றனர். அதற்காகவே தற்போது ஜெனீவாவில் துணைப்படை புரளியை கிளப்பியுள்ளனர். வடக்கு கிழக்கில் தட்டிக்கேட்க ஆளில்லாத நிலையை தக்கவைத்தால்தான் தமது படுகொலைகளையும், கட்டற்ற பண அறவீடுகளையும், ஆட்கடத்தலையும், அரச அதிகாரிகளை மந்தைகள் போல் மேய்ப்பதையும், பாடசாலை- பல்கலைகழக மாணவர்களின் கல்வியை சீர்குலைத்து தமது படுகொலை இராணுவ யந்திரத்தை விஸ்தரிப்பதற்கும், பொது மக்களின் உடைமைகளை நினைத்த மாத்திரத்தில் தமதுடமையாக்குவதற்கும் வசதியாக இருக்கும்.

புலிகளிடம் மக்களின் அபிலாசைகள் என்று எந்த விடயமும் கிடையாது. மக்கள் தமக்கு கீழ்ப்படிவுள்ளவர்களாக, மந்தைகள் போல் நடந்து கொள்ள வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள். புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசங்களில் மக்கள் அவ்வாறுதான் நடத்தப்படுகிறார்கள். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் தமது கொலை கரங்களின் நிழலை படியவிட்டுள்ளார்கள். தமது இரண்டு தசாப்த படுகொலை நடவடிக்கைகள் மூலம் அனைத்து பகுதிகளிலும் தமிழ் மக்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அவ்சியம் என்பதைப் பற்றி அவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது. அதேபோல் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களின் தனித்துவம், ஜனநாயக உரிமைகளை அவர்கள் மறுத்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து 75,000 முஸ்லீம்கள் சில மணி நேரத்தில் புலிகளால் அவர்களின் தாயகத்தை விட்டு துரத்தியடிக்கப்பட்டார்கள். இந்த நிலையில் வடக்கு கிழக்கில் மாற்று கட்சிகள் இருக்கக் கூடாது முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளை பேச தனி பிரதிநிதித்துவம் கூடாது என்ற புலிகளின் சதிகார நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கில் ஜனநாயகம், பன்மைத்துவம், மனித உரிமை என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், இந்தியா உட்பட வலியுறுத்தி வந்திருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் புலிகளை திருப்திப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டால் அது வடக்கு கிழக்கில் வாழும் அனைத்து சமூகங்களுக்கும் இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகவே இருக்கும்.

புலிகள் யுத்தத்திற்கு சிறுவர்களை திரட்டுவதை நிறுத்தவில்லை. அவாகள் தொடர்ந்து ஆட்திரட்டுவதை யுனிசெப்பின் அறிக்கைகள் இடையறாது உறுதிப்படுத்துகின்றன. சர்வதேச அளவிலும், உள்நாட்டிலும் எந்த அளவிற்கு தமிழ் சமூகத்தின் மீது அச்சுறுத்தலை மேற்கொண்டு பண வசூல் செய்கிறார்கள் என்பதைப்பற்றி சர்வதேச மனித உரிமை கண்காணிப்புக் குழுவும் அண்மைக்கால அறிக்கையொன்றில் விலாவாரியாக குறிப்பிட்டிருந்தது.

எனவே புலிகளை திருப்திப்படுத்தும் விதமாக மகிழ்ச்சியடையச் செய்யும் விதமாக காரியமாற்றுவது தமிழ் சமூகத்தை நரகப்படுகுழியில் தள்ளுவதற்கு சமானமாகும்.

எனவே வடக்கு கிழக்கில் ஜனநாயகமும், மனித உரிமையும் உறுதிப்படுத்தப்படுவதே இன்று முதலும் முக்கியமுமான விடயமாகும்.

## தெற்கில் ஜனநாயகத் தேர்தல்......................

அடைக்கப்பட்டார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட சரோஜினி யோகேஸ்வரன் யாழ் மாநகரசபை முதல்வராக இருந்ததற்காகக் கொல்லப்பட்டார். தங்கத்துரை திருகோணமலை மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததற்காக கொல்லப்பட்டார். அமிர்தலிங்கம் மக்களின் மனதில் வாழ்கிறார் என்பதற்காக நய வஞ்சகமாகக் கொல்லப்பட்டார்.

அதேபோல் ஈ.பி.ஆர்.எல்.எப் பாராளுமன்ற உறுப்பினர் சாம்தம்பிமுத்து மனித உரிமை தொடர்பாக அக்கறை கொண்டவர் என்பதற்காகவும் கிழக்கு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற மனிதர் என்பதற்காவும் கொல்லப்பட்டார். செழியன் பேரின்பநாயகமும் இதே போன்ற காரணங்களுக்காகவே படுகொலை செய்யப்பட்டார். தமிழ் மக்கள மத்தியில் மாற்று இயக்கங்கள், கட்சிகளின் வளர்ச்சி தமது ஏகபோக அதிகார பேராசைகளுக்கு இடைஞ்சலாகி விடும் என்பதற்காகவே அந்த இயக்கங்களின் செயற்பாடுகளை முடக்கினார்கள். தலைவர்களையும், போராட்டக் காரர்களையும், ஆதரவாளர்களையும் கொன்று தள்ளினார்கள். தமது எழுத்துக்கள் மூலம் புலிகளின் தார்மீக வலுபற்றி கேள்வி எழுப்பியதற்காக ரஜனி திரணகம போன்ற அறிஞர்கள், சபாலிங்கம் போன்ற மனிதர்கள் கொல்லப்பட்டார்கள்.

இவ்வாறு நிர்வாகத்துறையில் தமக்கு ஒத்துவராத அதிகாரிகளை, ஊழியர்களை கொன்று தள்ளினார்கள். இடதுசாரி தொழிற்சங்க அரசியல் தலைவர்களான அண்ணாமலை, விஜயானந்தன் போன்றவர்களை அழித்தார்கள். புலிகளின் கிழக்கு பிரிவினர் முரண்பட்டுக் கொண்டபோது நூற்றுக் கணக்கான கிழக்கின் மைந்தர்களை உடனடியாகவே கொன்றுதள்ளினார்கள்.

இது போன்று இங்கு குறிப்பிடப்படாத எண்ணற்ற நிகழ்வுகள் இருக்கின்றன.

இந்தப் பின்புலத்திலேயே வடக்கு கிழக்கில் உண்மையான ஜனநாயகத தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதேபோன்று திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் நிகழ்ந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் புலிகளின் ஒட்டுப்படையான தமிழர் கூட்டமைப்பு பிரதிநிதிகள் வெற்றி பெற்றதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

சமூகத்தின் தலைவர்களும் அழிக்கப்பட்டு, சமூகத்தில் மாற்றுக் கருத்துக் கொண்டோர் செயற்படுவதற்கான இடைவெளியும் பூச்சியமாக்கப்பட்டு, தமிழ் பிரபல ஊடகங்கள் யாவுமே ஒட்டுப்படை ஊடகங்களாக மாறி உணமைகளை ஆழப்புதைத்து புலிகளின் பிரச்சார சாதனங்களாக மாறிய நிலையில் மக்களுக்கு கருத்துக்கள் போய் சேர்வதற்கு பகுத்தறிந்து கொள்வதற்கு எந்த வாய்ப்புக்களும் இருக்கவில்லை. மரணத்தின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு வேறு மாற்று இருக்கவில்லை. தாம் வாக்களிக்கா விட்டால் கொன்றுவிடுவார்களோ என்ற அச்சமும் அவர்களுக்கு இருந்தது. நாசி யுகத்து ஜேர்மனியர்கள் போல் அவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

***அவர்கள் துரோகிகள் பட்டத்துடன் இறந்து போனார்கள். இவர்களுக்கோ மாமனிதர் பட்டத்துடன் வாழும் பேராசை***

கேவலம் தமது தலைவர்களையும். தோழர்களையும் புலிகள் படுகொலை செய்தபின்னர் தாம் அங்கம் வகித்த இயக்கங்கள் குற்றுயிரும் குறை உயிருமாக இருந்தபோது அந்த இயக்கங்களை சூறையாடி அந்த இயக்கங்

01ம் பக்கத் தொடர்ச்சி

களின் தோழர்களை, போராட்டக்காரர்களை புலிகளுக்குக் காட்டிக் கொடுத்து ஒட்டுப்படையாக மாறிய சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் வகையறாக்கள் தாங்கள் ஒன்றும் தெரியாத பாப்பாக்கள் போல் இப்போதுதான் புதிதாகப் பிறந்த விற்பன்னர்கள் போல் அதிக பிரசங்கித்தனமாக கிழக்கில் நிகழ்ந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒட்டுப்படைகளுக்கு நல்லபாடம் என்று பத்திரிகைகளுக்கு பேட்டிகொடுத்து தமது மேதாவிலாசத்தை காட்ட முனைகிறார்கள். இவர்களுடைய இந்த நடத்தை உண்மையில் இதுவரை படுகொலை செய்யப்பட்ட போராட்டக்காரார்கள் தமது முன்னாள் தோழர்கள் தலைவர்கள் இவர்களின் இந்த மரணங்கள் தமக்கு விடுதலை பெற்றுத் தந்திருப்பது போன்று மகிழ்ச்சியை புளகாகிதத்தைக் கொண்டாடுவதாகவே அமைந்திருக்கிறது.

இந்த அற்பர்கள் தாம் கண்கண்ட சாட்சிகள் தொடர்பாக தற்போது புலிகளுக்கு அடிபணிந்து பொய்ச்சாட்சி உரைக்க தலைப்பட்டிருக்கிறார்கள். இவர்களை கடந்த காலத்தில் பாராளுமன்றத்திற்கோ, உள்ளூராட்சி சபைகளுக்காக அனுப்புவதற்காக வீடு வீடாக உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் பிரச்சாரம் செய்து மடிந்த தோழர்களையும், நண்பர்களையும் இவர்கள் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

இவர்களுக்காக பிரச்சாரம் செய்து இறந்த சாதாரண குடும்பங்களின் புதலவர்களும் புதல்வியரும் துரோகிகளாக மரணித்த பின்னர் கேவலம் இவர்கள் மாமனிதர் பட்டத்துடன் வாழ விரும்புகிறார்கள். இங்கு இக்கட்டுரையில் உரைப்பது மனித உணர்வுகள் மறுத்துப் போன இந்த கடைகெட்ட அயோக்கியர்களுக்கு புரியும என்று நாம் நினைக்கவில்லை.

நன்றி:-
தமிழ்நியூஸ்வெப்

## தமிழ் மக்களின் மீதான......................

பவத்தில் தப்பிவந்து இத்தகவல்களைக கூறிய தைரி.

இதேபோல் இன்னும் ஒரு பகுதியினர் இந்தியாவிலிருந்து ஏமாற்றி வரவழைக்கப்பட்ட 30 ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுபபினர்கள். மன்னாரில் இருந்த ஈ.பி.ஆர். எல்.எவ் தொலைத்தொடர்பு பரிவர்த்தனையாளர்களை துப்பாக்கி முனையில் வைத்து, அவர்கள் மூலம் தம்மை ஆபத்திலிருந்து காக்கும்படி இந்தியாவிலிருந்த தலைமைக்கு செய்தி அனுப்பச் செய்தனர்.

இதனை நமபி படகில் வந்த 30 பேரைச் சுற்றிவளைத்துக் கைது செய்து, மன்னாரில் வைத்து விசாரணை நடத்திவிட்டு யாழ்ப்பாணத்தின் இச்சிறை முகாமுக்கு அனுப்பியிருந்தார்கள்.

இதைவிட, யாழ்ப்பாணத்தில் கைதான பல ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும், பொதுமக்களில் சிலரும் அச்சிறை முகாமில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் நகைக்கடை முதலாளி. புலிகள் கேட்ட பணத்தைக் கொடுக்காததால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அனைவரும் வெவ்வேறு அறைகளில் அடைக்கப்பட்டிருந்ததால் மொத்தமாக எத்தனை பேர் இருந்தனரெனச் சரியாக அறியக் கூடியதாக இருக்கவில்லை. சுமார் 30இறாத்தல் பாண் வாங்குவதைக் கருத்தில் கொண்டு 60க்கு மேற்பட்டோர் இருந்தனரெனக் கணக்கிட முடிந்தது. இங்கிருந்தோரை உற்றார், உறவினர் அல்லது வெளியார் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அங்கிருந்த சின்னதயான் என்பவரது மனைவிக்குக் குழந்தை பிறந்ததை அறிந்தும், மனைவி, குழந்தையைப் பார்க்க அனுமதிக்கப் படவில்லை. அவர் சாகும்போதும் தனது குழந்தையைப் பாராமலே சாக நேர்ந்தது.

அந்த இருளில் கடந்து கொண்டிருக்கிற கடிகார முட்களின் கணங்கள் ஒவ்வொன்றையும் காலன்தான் நகர்த்திக் கொண்டிருந்தான் என்பதை அறியாமல் அடைபட்டுக்கிடந்தார்கள் அவர்கள்.

இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கு வாழவேண்டிய வயது அவர்களுக்கு. ஆனால் அவர்களின் விதியை மாற்றி எழுதிய எழுதுகோலாக எமது விடுதலைப் போராட்டத்தின் துப்பாக்கி மாறியது. அது இரத்தத்தையே மையா

01ம் பக்கத் தொடர்ச்சி

க்கி தனது மரணத் தீவை வரலாற்றில பதிந்தது.

அன்று 1987 மார்ச் 30, இரவு சுமார் 9 மணியிருக்கும், யாழ்ப்பாணத்தை ஓர் அதிர்ச்சிச் செய்தி மெல்லக் கிலியிலாழ்த்தியது.

அன்றைய காலத்தில் புலிகளின் யாழ்ப்பாண இராணுவத் தளபதியான கிட்டுவின் வாகனத்தின் மீது கிரனேட் தாக்குதல் நடந்துவிட்டது என்பதுதான் அச்செய்தி. இத்தாக்குதலை யார் நடத்தினர் என்று அப்போது தெரிந்திருக்கவில்லை. பின்னர் அது புலிகள் இயக்கத்துக்குள் கிட்டுவுக்கும் மாத்தையாவுக்குமிடையிலான அதிகாரப் போட்டியில் மாத்தையாவின் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டது என்று ஊகிக்கக் கூடியதாயிருந்தது.

இத்தாக்குதலின் பின் கிட்டுவை உடனடியாகப் பொறுப்பிலிருந்து நீக்கி இந்தியாவுக்கு எடுத்து பின் லண்டனுக்கு அனுப்பியதும், மாத்தையாவிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்ததும் இதனை உறுதிப்படுத்துவதாக அமைந்தன. இத்தாக்குதலில் கிட்டு காலொன்றை

தொடர்ச்சி 06ம் பக்கம்


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**
**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 0362
71603 Ludwigsburg,
Germany.

B.M. Box No: 1738
London - Wcix - 3nn,
U.k.

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 222 2022,

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 22 25179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 22 27118

141A , மன்னார் ரோட்
குருமன்காடு,
வவுனியா.
☎ 024 22 23102

சென்செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 22 32822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் பிரதேசத்தில் தேர்தல் நடத்துவதாயின் சர்வதேச அமைப்பு ஒன்றை அழைக்கவேண்டும்

*-ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவின் -தலைவர் குஷ்னகான்*

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எதிர்காலத்தில் நேர்மையான ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்துவதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளின் கீழ் நடத்துவதற்கு தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய சர்வதேச அமைப்பு ஒன்று அழைக்கப்பட வேண்டும். இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல கண்காணிப்புக் குழுத் தலைவர் யோசனை வழங்கியுள்ளார்.

குறிப்பிட்ட சர்வதேச அமைப்பை சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து தேர்தல் பணியை செய்யுமாறு அழைக்க வேண்டும் என்றும் தனது சிபார்சில் தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் குழு தேர்தல் தொடர்பான தனது இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது. அதன் பின்னர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே குஷ்னகான் மேற்படி யோசனையை முன்வைத்தார்.

அவர் தெரிவித்ததாவது வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் எதிர காலத்தில் தேர்தல்களை நேர்மையாகவும் ஜனநாயக வழியிலான அங்கீகரிக்கப்பட்ட முறையிலும் நடத்துவதற்கு தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு சர்வதேச அமைப்பு ஒன்று அழைக்கப்பட வேண்டும். சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து சம்பந்தப்பட்ட அமைப்பை அழைக்க வேண்டும். கடந்த காலங்களில் யுத்தம் நடந்த ஆப்கானிஸ்தான், கம்போடியா, தென்னாபிரிக்கா, பொஸ்னியா, கொசேவா, லைபீரியா, கிழக்குத் திமோர் போன்ற நாடுகளில இதே நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. அந்த நாடுகளில் நடந்த முறைகளில் இருந்து பாடத்தைக் கற்று வடக்கு கிழக்கில் நடத்தப்படும் தேர்தல்களிலும் பின்பற்றலாம்.

## விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் ஜனநாயக ரீதியில் மக்களால் வாக்களிக்க முடியாது எனக்குற்றச்சாட்டு

### டோக்கியோ பிரகடனத்தின் கீழ் நிதிபெற...

மனிதஉரிமைகளை பேணவேண்டிய கடப்பாடு இரு தரப்புகளுக்கும் உண்டு. டோக்கியோ பிரகடனத்தின்கீழ் வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ள நிதி உதவிகளை பெற வேண்டுமாயின் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மனித உரிமைகளை மதித்துச் செயற்படவேண்டும்.கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது தெற்கில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது.

ஆனால் வடக்கு கிழக்கில் வித்தியாசமான போக்குக் காணப்பட்டது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மற்றும் அவரகளின் செல்வாக்கில் உள்ள பகுதிகளில் மக்கள் தங்கள் ஜனநாயக மனித உரிமையான வாக்குரிமையை பயன்படுத்த முடியவில்லை. தேர்தல் பிரசாரம் கூட நடக்கவில்லை. அப்பகுதி மக்கள் தமது வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்துவதற்கு முடியாமல் போனமைக்கு விடுதலைப் புலிகளாலும் அவர்களுக்கு சார்பான அமைப்புகளினாலும் திணிக்கப்பட்ட பகிஷ்கரிப்பே காரணமாகும். இது கவலைக்குரியவிடயமாகும்.

### தேர்தல் ஆணைக்குழு

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் சுயேட்சையான ஆணைக்குழுவும் சுயேட் சையான தேர்தல் ஆணைக்குழுவும் அமைக்கப்பட வேண்டும். இதில் அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டும்.வாக்காளர் பதிவு விடயத்திலும் அடிப்படையில் பல குறைபாடுகள் உள்ளன. அதைத் திருத்தி குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். வடக்கு கிழக்கிலும வாக்காளர் பதிவு விடயத்திலும் பெரிய பிரச்சினை இருந்தது. கொழும்பு வாக்காளர் பட்டியலிலும் குளறுபடிகள் காணப்பட்டன.

### ஊடக ஆணைக்குழு

தேர்தல் காலத்தில் மட்டுமன்றி தொடர்ந்து செயற்படக்கூடிய வகையில் அரச தனியார் ஊடகங்களுக்கு வழிகாட்டல்களை வழங்க சுயேச்சையான ஆணைக்குழு அமைக்க வேண்டும். இக்குழு வழிகாட்டல்களை மட்டும் வழங்க வேண்டும. ஊடக சுதந்திரத்தில் கை வைக்கக் கூடாது. தேர்தல் வன்செயல்களை கண்காணிக்கும் நிலையமும் நேர்மையான சுதந்திர தேர்தல் அமைப்பும் தேர்தலில் நல்ல சேவையை வழங்கியுள்ளன. அந்த அமைப்புகள் வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்கு எண்ணும் நிலையங்களிலும் பணியாற்ற வகை செய்யும் சட்டம் இயற்றப்படுவது அவசியம் என்றார் குஷ்ன கான்.


# பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் - பாரதியார்

யாழ்ப்பாண பல்கலைகழகத்திற்கு கலாநிதி ரட்ணஜீவன் ஹூல் அவர்களை உபவேந்தராக ஜனாதிபதி நியமித்து ஒரு மாதம் ஆகப்போகிறது. ஆனால் அவர் அங்கு சென்று பணியாற்றுவதற்கான சூழ்நிலை அங்கு இன்னும் தோற்றுவிக்கப்படாதது துரதிஷ்டமானது. யாழ்ப்பாணத்தில் அறிவுக்கும் தேடலுக்கும் எதிரான செயற்பாடு கடந்த இரண்டு தசாப்தங்களாக நிலவுகிறது.

கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், கவிஞர்கள், சுதந்திரக் கருத்தாளர்கள், சுதந்திர அரசியல் கருத்துடையோர், மனித உரிமை வாதிகள், ஜனநாயக வாதிகள் இவர்கள் யாரையும் வெறுப்புடன் நோக்கும் பாசிசம் தமிழ் சமூகத்தில் வேரூன்றி உள்ளது. இது வடக்கு- கிழக்கின் கல்வி, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக உள்ளது.

ஆயிரம் மில்லியன் மக்கள் கொண்ட எமது அண்டை நாடு இந்தியாவின ஜனாதிபதியாக பெருமைமிகு விஞ்ஞானி அப்துல் கலாம் விளங்குகிறார். சிறுவர், சிறுமியர் அவரின் பரமரசிகர்கள்.

ஆனால் கேவலம் ஒரு தலைசிறந்த கல்வியாளரை தான் சார்ந்த சமூகத்திற்கு தனது சேவையை செய்யும் கனவோடு வாழும் மனிதரை அங்கு வருவதற்கு ஆயுதங்கள் மேல் நம்பிக்கை கொண்ட வன்முறையாளர்கள் அவரை அனுமதிக்க வில்லை.



அந்த பல்கலைகழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், மாணவர்களும் விருப்பம் கொண்டிருந்தபோதும் அவர்கள் தமது விருப்பத்தை வெளியிடமுடியாத பீதியின் நிழலில வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைகழகம் ஆரம்பிக்கப்பட்ட 70 களின் நடுப்பகுதியிலும் சரி, 80களின் முற்பகுதியிலும் சரி இலங்கையின் வேறு பகுதிகளிலும், பல்வேறு நாடுகளிலும பணியாற்றிய விரிவுரையாளர்கள் அங்கு வந்து பணிபுரிய முன்வந்தனர்.

ஆனால் அங்கு 80களின நடுப்பகுதியில் ஜனநாயக இடைவெளி குறையத் தொடங்கியபின் பல கல்விமான்கள் சொந்த ஊரை விட்டு வெளியேறத் தொடங்கினர். தமிழ் பாசிஸ்டுக்களின் ஈவிரக்கமற்ற கொலைவெறி கல்விமான்களையும் விட்டுவைக்கவில்லை.

யாழ் பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா 1980 களின் நடுப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டார். யாழ் பல்கலைகழக வைத்தியபீட விரிவுரையாளர் ரஜணி திரணகம 1980 களின் பிற்பகுதியில் யாழ் பல்கலைகழக வைத்தியபீட வாசலில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். "பென் அமெரிக்கா" விருது பெற்ற கவிஞர்

தொடர்ச்சி 04ம் பக்கம

# மார்ச்-08 சர்வதேச மகளிர் தினம்



சர்வதேச மகளிர் தினமான இன்று உலகளாவிய அளவிலும் எமது நாட்டிலும் பெண்களின் நிலை தொடர்பாக சில விடயங்களை குறிப்பிட்டாக வேண்டும். பெண்கள் பல துறைகளில் முன்னணிக்கு வந்திருப்பினும் பெண்களின் வளர்ச்சிக்கு தடையான சவால்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. வறுமை, யுத்தம் என்பன பெண்களே பெருமளவில் முகம் கொடுக்கும் சவால்களாக அமைந்துள்ளன.

பெண்களின் கல்வி வளர்ச்சியில் இன்னும் நெடிய பயணம் இருக்கிறது. இரண்டும் கெட்டானான எமது கீழைதேசத்தில் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் மிச்ச சொச்சங்களாலும் சமகால முதலாளித்துவ நுகர்வு கலாச்சாரத்தாலும் பெண்கள் பெரிதும் சுரண்டப்படுகிறார்கள் என்றே கூறவேண்டும்.

மத்திய கிழக்குக்கு வீட்டு பணிப் பெண்களாக சென்ற பெண்கள் இன்று பெரும் மனித உரிமை மீறல்களை எதிர்நோக்கி நிற்கிறார்கள். இலங்கையில் சுதந்திர வர்த்தகவலயத்தில் வேலை செய்யும் பெண்கள் இன்றும் ஆகக் குறைந்த ஊதியம் பெறுபவர்களாகவே வாழ்கிறார்கள்.

இலங்கையில் யுத்தமாயினும் சரி, சுனாமியாயினும் சரி இதில் பெருமளவில் பாதிக்கபட்டவர்கள் பெண்களே. இறந்தவர்கள் அதிகம் பேர் பெண்களே. பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் விதமாக நம்து நாட்டின் நிர்வாக அரசியல் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இன்னும் தந்தையர் வழி ஆதிக்க நிலையே காணப்படுகிறது.

ஊடகங்களும் நுகர்வு பண்ட விளம்பரங்களும் பெண்களை இன்றும போகப் பொருட்களாகவே கருதுகின்றன. அது மிகவும் வச்சாகவும், வேகமாகவும், நிகழ்கின்றது. பெரும்பாலான தமிழ் தொலைக்காட்சி தொடர்கள், நாடகங்கள், சினிமாக்கள் பெண்கள் சகல அக்கிரமங்களையும் சகித்து செல்பவர்களாகவே சித்திரித்து காட்டுகின்றன.

வடக்கு கிழக்கில் ஒழுக்கத்தின் பேரில் பல பெண்கள் வன்முறை தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள், படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசியலில் ஈடுபட்டதற்காக கருத்து சொல்லும் சுதந்திரத்திற்கு போராடியதற்காக பெண்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தமது பிள்ளைகளை யுத்த தேவைகளுக்கு ஒப்படைக்காததற்காக தாய்மார், சகோதரிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆயுத அதிகார மேலாண்மை என்பது வடக்கு கிழக்கில் பெண்கள் மீது வன்முறைகளை அதிகரிக்கச் செய்திருக்கின்றன. யுத்தமாயினும் சரி இயற்கை அனர்த்தமாயினும் சரி அதிகூடிய பாதிப்புக்களை சந்திப்பவர்கள் பெண்களாகவே இருக்கிறார்கள்.

அழிவில் இருந்து சமூகத்தை மீட்பதில் மறுமலர்ச்சியடையச் செய்வதில பெணகளின் பங்கு மகத்தானது. பெணகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதும் இனங்களின் சமத்துவம் மற்றும் சமாதானம் நிலை நிறுத்தப்படுவதும் பிரிக்கமுடியாத அம்சங்களாகும்.


ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு பெண்களின் உரிமைகள் எந்தளவு தூரம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை வைத்து அளவிட்டு விட முடியும்.

மலையக தோட்டத் தொழிலாளர்களான பெண்கள், சுதந்திர வர்த்தக வலயத்தில் உழைக்கும் பெண்கள், மத்திய கிழக்கில் வீட்டுப் பணிபுரியும் பெண்கள இவர்களும் வடக்கு கிழக்கில் யுத்த அவலங்களுக்கு மத்தியில இயற்கை அனர்த்தங்களிலிருந்து மீண்டெழுவதற்காக போராடிக்கொண்டிருக்கும் பெண்கள் இவ்வாறு ஒடுக்கப்பட்ட அனைத்து பெண்களும் அணி திரள்வது உலகளாவிய அளவில் பெண்களுக்கிடையேயான சுதந்திரமான இணைப்பு ஏறபடுத்தப்படுவதும் ஒரு வரலாற்று அவசியமும்கூட. ஒரு சுபிட்சமான எதிர்காலமும் பெண்களின் உரிமையும் இரண்டறக் கலந்தவை.

நன்றி:-
தமிழ்நியூஸ்வெப்

# நினைவு தினம்

## தோழர் குமார் 04.03.1987 வி.சண்முகநாதசிவம் தம்பிலுவில்




அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலைச் சேரந்த தோழர் குமார் (வி. சணமுகநாதசிவம்) ஈழமாணவர் பொதுமன்றத்தில் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தவர். ஈழமாணவர் பொதுமன்றத்தின் செயற்பாடுகள் ஊடாகவே அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்தவர்.

ஆரம்பகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் அரசியல் பணிகளை முன்னெடுப்பதில் காத்திரமான பங்கெடுத்தவர். 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கட்சி காங்கிரசில் கலந்துகொண்டார். அக்காங்கிரசில் மத்திய குழுவுக்கு தெரிவுசெய்யப்பட்ட 9 பேரில் தோழர் குமார் ஒருவர் ஆவார்.

1984 ஆம் வருடம் உன்னிச்சை பகுதியிலிருந்து புலிகள் முஸ்லிம்களை வெளியேற்ற முனைந்தபோது அதனை கடுமையாக எதிர்த்தவர். தமிழ் முஸ்லிம் ஐக்கியத்திற்காகவும், தமிழ் இயக்கங்களிடையே ஐக்கியத்திற்காகவும் எப்போதும் ஈடுபாடு காட்டினார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் அரசியல் பிரச்சாரங்களை முன்னெடுத்து கிழக்கு மாகாண இளைஞர்களை அணிதிரட்டியதுடன் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் பயிற்சி முகாம் ஒன்றை நிறுவி இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்குவதற்கும் முன்னின்று செயற்பட்டார்.

04.03.1987 மருதமுனை நீலாவணை எல்லைப்பகுதியில் ஈ.பி.ஆர். எல்.எவ் முன்னணித் தோழர்களுடன் கூட்டம் ஒன்றை நடாத்திக்கொண்டிருந்த வேளை இராணுவத்தினர் சுற்றி வளைத்து தாக்குதல் நடாத்திய வேளையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிர் நீத்தார். அவரை நினைவு கூர்ந்து எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் தாகம்

ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஜெனீவா பேச்சுக்களின் போதும் தொலைக்காட்சி பேட்டியளித்த போதும் தமிழ் இயக்கங்கள் எல்லாரும் எங்களோடை தான் இருந்தவை என்றும் பின்னர் அவர்கள் தமது கொள்கையிலிருந்து விலகி இந்திய இராணுவத்திற்கும் இந்திய இராணுவம் வெளியேறியதும் இலங்கை இராணுவத்திற்கும் துணைப்படையாக செயற்பட்டு வருவதாக தெரிவித்திருந்தார். இன்றைக்கு 20 வயதில் உள்ள ஒரு இளைஞன் பாலசிங்கத்தின் இந்த கூற்றை நம்பலாம். ஆனால் 1986 ஆம் ஆண்டு புலிகள் ஏனைய இயக்கங்கள் மீது நடாத்திய தாககுதல்களை புரிந்த அராஜகத்தை கண்டவர்கள், அக்காலத்தில் நினைவு தெரிந்த எவருக்கும் பாலசிங்கத்தின் கூற்று உண்மைக்குப் புறம்பானது என்று சொல்ல வேண்டியதில்லை.

ஆயுதப்போராட்டத்தி ஆரம்பக் கட்டத்தில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, எல்.ரி.ரி.ஈ, ஈரோஸ் ஆகிய ஐந்து பிரதான இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தன. மக்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெற்றிருந்தன. இடதுசாரி கருத்துக்கள் பால் ஈடுபாடு கொண்டிருந்த, கூட்டுத் தலைமையை வலியுறுத்திய ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ஈரோஸ் ஆகிய இயக்கங்கள் புலிகளின் தனிநபர் தலைமைத்துவத்தை ஒருபோதும் ஏற்கவில்லை. மாறாக அதனை விமர்சித்தே வந்தார்கள்.

1984 இல் உருவாக்கப்பட்ட ஈ.பி.ஆர்,எல்.எவ், ஈரோஸ், ரெலோ ஆகிய இயக்கங்களை உள்ளடக்கிய ஈ.என்.எல்.எவ் என்ற கூட்மைப்புக்குள் கூட 1985 இல் தான் புலிகள் இணைந்து கொண்டார்கள். அன்றைக்கு தமிழர் இயக்கங்கள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோரிக்கை இலங்கை தமிழர் மத்தியிலும், தமிழ்நாட்டிலும் வலுவடைந்திருந்தமையால் இணைந்துகொண்ட புலிகள் 1986 மே மாதம் 26ம் திகதி ரெலோ இயக்கம் மீது திடீர் தாக்குதலை நடாத்தினர் அதனையடுத்து 1986 மார்கழி 13ம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எவ் முகாம்கள் மீது தாக்குதல் நடாத்தினர் ஈ.பி.ஆர்.எல்எவ் மீது தாககுதல் நடாத்துவதற்கு சிலநாட்கள் முன்னதாக புளொட் இயக்கத்தை கலைத்துவிடுமாறும், அரசில் நடவடிக்கைகளை நிறுத்துமாறும் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

இந்த இயக்கங்களை ஆயுதபலாத்காரம் கொண்டு அடக்கி, அவற்றின் அங்கத்தவர்களை கைதுசெய்து அவர்களிடமிருந்த ஆயுதங்களை பறித்ததோடு, அனைவரையும் சிறையில் அடைத்தனர். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினர். பலரை சுட்டுக்கொன்றனர். இவ்வாறு அன்றைக்கே தமது ஏக அதிகாரத்தை நிலைநிறுத்துவதில் குறியாகச் செயற்பட்டனர்.

எனவே வடக்கு கிழக்கில் தம்மைத் தவிர்ந்த தமிழ அரசியல் அமைப்புக்களை இல்லாமல் செய்வதற்கான அவர்களது முனைப்பு இன்று ஆரம்பமானதல்ல. காலத்துக்கு காலம் அவர்கள் சமூகவிரோதிகள் எனறும், துரோகிகள் என்றும் ஏதாவது ஒரு விதத்தில சக அமைப்புக்களை அழித்தொழித்து வந்தனர். அதேவேளை தமது ஏதேச்சாதிகாரப் போக்கை, படுகொலைகளை நியாயப்படுத்த கதைகளை சோடித்து வருவதுதான் புலிகளின் வரலாறு.

தற்போது அரசியல் கட்சிகளாக செயற்படும் முன்னாள் போராளி அமைப்புக்களை துணைப்படைகள், பராமிலிடரி, ஒட்டுப்படைகள் என முத்திரை குத்தி ஓரங்கட்ட முனைந்துள்ளனர். இலங்கை அரசுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு தவறான வியாக்கியானங்களை வழங்கி இலங்கை அரசாங்கத்தையும், இராணுவத்தையும் கொண்டே இந்த காரியத்தை முடிக்க படாதபாடு படுகின்றனர். இவ்வாறு இதர தமிழர் அரசியல் கட்சிகளை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்ற முனைந்திருப்பதை புலிகளின் நீண்ட நாளைய திட்டத்தின் ஒரு பகுதியாகவே நோக்க வேண்டும்.

புலிகள் யாழ் குடாநாட்டுக்குள் வந்ததும் முதல் வேலையாக ஈபிடிபியினரை யாழ் மாவட்டத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் இறங்கினர். யாழ் மாவட்டத்திலிருந்து ஈ.பி.டி.பி யினரை வெளியேறக் கோரி மக்கள் போராடுவதாகத் தெரிவித்து ஈ.பி.டி.பி காரியாலயங்களுக்கு முன்னால் புலிகளே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். புலிகளின் திட்டம் பலிக்கவில்லை.

இதன்பின்னர் தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களை தாக்கியும், மிரட்டியும் அந்த கட்சிகளை விட்டு விலகுமாறும் இல்லையேல் உயிரை விட நேரும் எனவும் அச்சுறுத்தினர். புகைப்படத்துடன் தமது அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு மிரட்டி அழைத்தனர். இதுபற்றி யுத்தநிறுத்த கணகாணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டது. அந்த முறைப்பாடுகள் குறித்து யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்ட போது அவ்வாறு தமது அலுவலகத்திற்கு வருமாறு யாருக்கும அழைப்பு விடுக்கவில்லை, அச்சுறுத்தல் விடுக்கவில்லை என அந்த பிரதேசத்தில் உள்ள புலிகளின் அலுவலகப் பொறுப்பாளர் அலுவலகத்தில் வைத்து தெரிவித்திருந்தார். கடந்த வருடம் மருதனாமடம் சந்தியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட 61 வயதான சுந்தரம் ஐயா அவ்வாறு புலிகளால் அழைப்பு விடுக்கப்பட்டு, அச்சுறுத்தலுக்கு உள்ளாகியவர்களில் ஒருவராவார்.

பொதுமக்கள் இந்த கட்சி அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டாம் என துண்டுப்பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டனர். பல பகிரங்க எச்சரிக்கைகளை விடுத்தனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் கட்சி உறுப்பினர்கள் அச்சுறுத்தப்படுவது குறித்தும், தாக்கப்படுவது குறித்தும் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செயயப்பட்டது. இதுபற்றி விசாரணை நடத்திய யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் புலிகளிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ஒன்றின் பிரதிகளை தமிழ் அரசியல் கட்சிகளிடம் கையளித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்த ஒரு அரசியல் கட்சியும் தமது அரசியல் நடவடிக்கைகளை சுயாதீனமாக முன்னெடுப்பதற்கு ஒரு போதும் தடையாக இருக்கப்போவதில்லை என அக்கடிதத்தில் புலிகள் உறுதியளித்திருந்தனர். கொக்கட்டிச் சோலையில் உள்ள புலிகளின் மாவட்ட அலுவலகம் வழங்கிய இக்கடிதத்தின் பிரதிகள் ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளுக்கு யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கட்சிகளை முடக்க அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் புலிகள் பல்வேறு நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துவிட்டனர். இவை எதுவும் பாலசிங்கம் அண்ணருக்கு தெரியாததால் அவர் ஏதோ இப்பதான் புலிகள் மற்ற இயக்கங்களை வெளியேறச் சொல்வது மாதிரி, அட்டகாசம் பொறுக்க முடியாமல் இப்போதுதான் அக்கட்சிகள் மீது பழி சொல்வது மாதிரி வெளிநாட்டாருக்கு அளந்து தள்ளியிருக்கிறார்.

இப்போது ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளை துணைப்படைகள் என்று கூறி வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்ற வேண்டும் என புலிகள் கோருகின்றனர். புலிகளின் நியாயப்படி புலிகளின் இந்தப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்குக் கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட புலிகள் அனுமதிப்பார்களா? ஆனந்த சங்கரி மட்டுமல்ல தம்மைத் தவிர வேறு எந்த அமைப்பும், கட்சியும் வடக்கு கிழக்கில் சுதந்திரமாக செயற்பட புலிகள் அனுமதிக்கத் தயார் இல்லை.

அன்ரன் பாலசிங்கத்தின் கடந்த வருட மாவீரர் தின உரையை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். "கிளிநொச்சியில் ஆனந்தசங்கரி அவர்களை வரவேற்க, சாப்பாடு தர பொட்டம்மான் காத்திருக்கிறார்" என்று சிலேடையாக அவர் தனது உரையில குறிப்பிட்டிருந்தார். புலிகள் தம்மைத் தவிர வேறு அரசியல் கட்சிகள் வடக்கு கிழக்கில் நிலைகொள்வதை சகித்துக் கொள்ள முடியாதவர்களாய் உள்ளார் கள் என்பது புலிகளின் ஒவ்வொரு அசைவிலும் வெளிப்படும் தமிழர்களின துயரங்கள் பலவற்றுக்கும் அதுவே பிரதான காரணம்.

மேற்படி தமிழ் அரசியல் கட்சிகள ஆயுதங்களை பிரயோகிக்கவில்லை. தாங்கள் குறிப்பிடும் யுத்த நிறுத்த மீறல்களிலோ, வன்முறைகளிலோ ஈடுபடவில்லை என்பது புலிகளுக்கு நன்கு தெரியும். ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பயன்படுத்தி, தமிழ் அரசியல் கட்சிகளை துணைப்படைகள் என்று முத்திரை குத்தி வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும். வடக்கு கிழக்கில் தமது ஏக அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற ஆதிக்க வெறியே காரணம்.

ஜெனீவா பேச்சுக்களின் போது புலிகள் புலனாய்வு தகவல், இரகசிய ஆவணம் என்று கூறி புலிகள் ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

கடந்த கால் நூற்றாண்டுகளாக தமிழ் மக்களின் அரசியல் ரீதியான போராட்டங்களுடன் தொடர்புடையவர்களின் பெயர்களும், அவர்களது அலுவலகங்கள் இயங்கும் இடங்களும இரகசியமானவையல்ல பகிரங்கமாக ஜனநாயக அரசியலில் ஈடுபடுபவர்களின பெயர்களும், அவர்களது அலுவலகங்களும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கும், நோர்வே அனுசரணையாளர்களுக்கும் கூட தெரிந்தவைதான். புலிகள் புலனாய்வுத் தகவல்களை தந்துவிட்டதாக அவர்களது ஊதுகுழல்களைக் கொண்டு பிரச்சாரப் படுத்தி வருகின்றனர்.

ஆனால், அந்த ஆவணம் யானை உண்ட விளாம்பழத்தை போன்றது தான். புலிகளின் ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையிலேயே ஆதாரமுள்ளவை எனின் ஜெனவாவில் நோர்வே மத்தியஸ்தர்களிடம் வழங்கிய இந்த ஆவணத்தை புலிகள மக்கள் முன் வைக்கட்டும்.

யாழ் குடாநாடு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் 1997 ஆம் வருடம் யாழ் குடாநாட்டில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய முன்னாள் போராளி இயக்கங்களும் ஈ.பி.டி.பியும் யாழ் குடாநாட்டில் அலுவலகங்களை அமைத்து செயற்படத் தொடங்கினர். நன்றியுணர்வோடு மக்கள் வழங்கிய ஆதரவுடன் அரசியல் பணிகளை மேற்கொண்டனர். பல்வேறு வழிகளிலும் மக்களுக்கு உதவினர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்டனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டு மாநகர முதல்வர்கள் உட்பட பல உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை சுட்டுக்கொன்றனர்.

இன்று முன்னாள் போராளிகளான தமிழ் அரசியல் கட்சிகளை புலிகளை விடவும் தீவிரமாக துணைப்படைகள் என்று தூற்றும் பராளுமன்ற உறுப்பினர்களான மாவைசேனாதிராசா, ந.ரவிராஜ் ஆகிய இருவரதும் கட்சியான தமிழர் விடுதலை கூட்டணி புலிகளால சுட்டுக்கொல்லப்பட்ட தமது யாழ் மாவட்ட கட்சி அமைப்பாளர் மதிமுகராசா அவர்களின் சடலத்தை இராணுவத்தினின் பாதுகாப்புடனேயே அன்று மயானத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியிருந்தது.

யுத்தநிறுத்தத்தை பயன்படுத்தி கடந்த 2002 ஆம் வருடம் அரசியல் பணிகளை மேற்கொள்ளப் போவதாகக் கூறி யாழ் மாவட்டத்திற்குள் வந்த புலிகள்மெல்ல மெல்ல வேலையைக் காட்டத் தொடங்கினர். யுத்தநிறுத்த உடன்படிக்கையை பயன்படுத்தி புலிகள் யாழ் குடாநாட்டுக்குள் செயற்படத் தொடங்கிய பின்னரே இங்கு படுகொலைகள் உச்சத்திற்குச் சென்றன. இக்காலத்தில் 115 க்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இவற்றில் 100 க்கும் மேற்பட்டவர்களை புலிகள் கொன்றதற்கான ஆதாரங்கள் உள்ளன.

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது யுத்த நிறுத்த மீறல் என-குறிப்பிடப்பட்டிருப்பதால் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவினரை உசாரடையச் செய்துவிடும் என்ற நினைப்போடும் தனிப்பட்ட குரோதம், சமூகப்பிரச்சினை என பழியை பொது மக்கள் மீது திருப்பி விடுவதற்காகவும் பலரை வாளால் வெட்டி கொன்றனர். ஆரம்பத்தில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகள் குறித்து யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு காட்டிய அசிரத்தையை அவதானித்த புலிகள், பின்னா துப்பாக்கிகளை பயன்படுத்த ஆரம்பித்தனர். இதன் பின்னரே படிப்படியாக இயல்புநிலை சீர்குலைந்தது. தமிழ் அரசியல் கட்சி அலுவலகங்கள் இராணுவத்தினரதும், பொலிஸாரதும் பாதுகாப்பை பெறவேண்டி ஏற்பட்டது. அண்மையில் மக்கள் படை என்ற பெயரில் புலிகள் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சுக்கள், கிளைமோர் தாக்குதல்கள் நிலைமையை மேலும் மோசமடையச் செய்தது மக்களுக்கு நன்கு தெரியும்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுக்கு துணையாக நின்று முதல் முதலில் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரே அதிகார அலகான வடக்கு கிழக்கு மாகாண சபையை புலிகள் நிர்மூலமாக்கினர்.

இப்போது யுத்தநிறுத்தம், சமாதானம், இயல்புவாழ்வு என்று கூறிக்கொண்டு புலிகள் மேற்கொள்ளும் ஜனநாயகத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்களை இதர தமிழர் அரசியல் கட்சிகளே வெளிச்சத்திற்கு கொண்டுவருகின்றன எனவே, தமிழர் அரசியல் கட்சிகளை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றி விட வேண்டும் என்பது புலிகளின் திட்டமாகும்.

வடக்கு கிழக்கில் புலிகள் செய்துவரும் படுகொலைகள், அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள் அட்டூழியங்கள் அனைத்தையும் உடனுக்குடன இந்தக் கட்சிகள் வெளிஉலகுக்கு தெரியப்படுத்துவது மனித உரிமைகள் குறித்தும், ஜனநாயகம் குறித்தும் அக்கறை காட்டும் உலக நாடுகள் மத்தியில் நிறுவனங்கள் மத்தியில் புலிகளுக்கு பெரும் நெருக்கடிகளை உருவாக்கி உள்ளன.

இந்த கட்சிகளை வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றிவிட்டால் புலிகளின் மனித உரிமை மீறல்கள் ஜனநாயகவிரோதப் போக்குகள் குறித்து பேச வேறு யாரும் இருக்கமாட்டார்கள் என்பது புலிகளின் எண்ணமாகும். வரலாற்றில் இதற்கு ஆதாரம் எதுவும் இல்லையாயினும் புலிகள் அதனையே நம்புகின்றனர்.

## பேரூரச் செய்தால்.................

03ம் பக்கத் தொடர்ச்சி

செல்வி கடத்திச் செல்லப்பட்டார். இவ்வாறு எண்ணற்ற சம்பவங்கள் நிகழ்ந்தன. அறிவுக்கு எதிரான வன்முறை கல்வியை மூலதனமாகக் கொண்ட சமூகத்தில் அதனை ஒரு அறிவுப் பாலைவனமாக்கியது.

1970 களின் நடுப்பகுதியில் இருந்து 80களின் நடுப்பகுதி வரை கணிசமான சமூக ஈடுபாட்டுடன் செயற்பட்ட யாழ் பல்கலைகழகம் வன்முறைகள் காரணமாக தனது சமூகச் செயற்பாட்டிலிருந்து விடுபடும் நிலைமை உருவாகியது. அது ஒரு தனி தீவாக மாறியது. ஒரு இனம் புரியாத நிசப்தம் நிலவியது.

பின்னர் வன்முறையாளர்கள் யாழ் பல்கலைகழகத்தினுள் ஊடுருவி அதனை தமது கைக்கருவியாக பாவிக்கத் தொடங்கினர். சுயாதீனமான ஒரு கல்வி ஸ்தாபனம் என்ற நிலையிலிருந்து அது பாசிச சக்திகளின் கைப்பாவையாக செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டது.

இன்று கலாநிதி ரட்ணஜீவன் ஹூல அவர்களின் வருகையை எதிர்ப்பதையும் இந்த பின்புலத்திலேயே பார்க்க வேண்டும். பாசிசம் தனது அதிகார அகங்காரத்தைத் தவிர அது கோலோச்சும் சமூகத்தில் கல்வி, கலாச்சாரம், சமூகப் பொருளாதார விவகாரங்கள் அத்தனையிலும் தனது முத்திரையை பதிக்கும். சமூகத்தின் சகலவிதமான முன்னேற்றம் தொடர்பான கனவுகளையும் அது தகர்த்து விடும்.

எமது சமூகத்தைப் பீடித்துள்ள நோய்க்கு இன்றைய யாழ் பல்கலைகழகத்தின் நிலை ஒரு சிறந்த உதாரணம்

யாழ் பல்கலைகழகத்தின் இந்த நிலை ஜனநாயகம், மனித உரிமை, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றின் தேவையை உணர்த்தி நிற்கிறது.

யாழ் பல்கலைகழகத்தினுள் ஜனநாயக உணர்வு நிலவினாலும் அதனை செயற்படுத்த முடியாத அளவிற்கு பெரும் அச்சுறுத்தலாக பாசிசம் வியாபித்துள்ளது. யாழ் பல்கலைகழக விரிவுரையாளர்களே தமது மூன்று தெரிவுகளில் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் அவர்களையும் தெரிவு செய்திருந்தனர். ஆனால் அவர்களின் விருப்பத்தெரிவுக்கு எதிராக பாசிசம் தனது அச்சுறுத்தலை விடுத்துள்ளது.

ஒரு சுயாதீனமான சூழலில் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் அவர்கள் இன்னும் அதிகமான வாக்குகளை பெற்றிருப்பார்.

பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தமது பல்கலைகழகத்திற்கு வரமுடியாது போன சூழ்நிலை தொடர்பாக பெருவாரியான மாணவர்களும், பல்கலைகழக ஆசிரியர்களும் விசனம் கொண்டுள்ளார்கள் என்பதே உண்மை நிலையாகும்.

நன்றி:-
'தமிழ்நியூஸ்வெப்'

## மா.ஃ.பியாக்களின்.......

06ம் பக்கத் தொடர்ச்சி

ரிக்கை விடுகிறார்கள். இதுபற்றி நயமாக சிரித்து பேசிக்கொண்டு சர்வதேச சமூகம் இருக்க முடியாது. இதில் உறுதியாக திட்டவட்டமாக புலிகளுக்கு சில விடயங்கள் சர்வதேச சமூகத்தினூடாக உரைக்கப்பட வேண்டும உணர்த்தப்பட வேண்டும். மனித கண்ணியத்தை புலிகள் மதிக்காதவரை அந்த கண்ணியத்தை அவர்களுக்கு வழங்க முடியாது.

மாற்று தமிழ் தலைவர்கள், கட்சிகளின் அங்கத்தவர்களை கடந்த இரண்டு தசாப்தங்களில் இடையறாது கொன்றொழித்துவிட்டு தமிழ் மக்களின பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக வாய்த்த சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் நாசம் செய்துவிட்டு தாம் சுளுவாக, வளமாக கப்பம் வசூலிப்பதற்கான வசதிகளை மாத்திரம் தக்க வைத்துக்கொண்டிருக்கும் புலிகள் வடக்கு கிழக்கில் இருந்து மாற்று தமிழ் அமைப்புக்களை வெளியகற்றக கோருவது மொத்தமாகவே தமிழ் சமூகத்தை சூறையாடுவதற்கும் ஊரை சுடலையாக்குவதறகுமே.

புலிகள் துணைப்படைகள் என்று சொல்லி மற்ற தமிழ் கட்சிகளை வெளியேறக்கோருவதை சர்வதேச சமூகமும், அரசும் பொறுமையுடன் செவிமடுப்பதும் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் நேசிப்பவர்களுக்கு அதிர்ச்சியளிப்பதாகவே அமைகிறது. நாம் புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை விட்டு விட்டு, பயங்கரவாதத்தை விட்டு விட்டு உலக பயங்கரவாதத்தைப் பற்றி பேசமுடியாது. இலங்கையின் உண்மையான ஜனநாயகவாதிகள் இவ்வாறே சிந்திக்க முடியும்.

வடக்கு கிழக்கில் மாற்றுக் கருத்துக்கான இடைவெளியை எந்தவித சமரசத்துக்கும் இடமின்றி சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாங்கள் கோருவது சர்வதேச தரத்திலான ஜனநாயகம்,மனித உரிமைகளையே. புலிகளின் தராதரத்திலான மா.ஃ.பியா ராச்சியத்தையல்ல.

நன்றி:- 'தமிழ்நியூஸ்வெப்'
06-03-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்

### சாராம்சமும் பரிந்துரைகளும்

90 வீதமான மக்கள் புலிகள் இயக்கத்தை ஆதரிக்காது விட்டாலும்கூட அவர்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். கொலைகள் இலங்கையில் மட்டுமே நடந்து விடுவன இல்லை. பாரிசிலும் கனடாவிலும்கூட அவை நிகழ்கின்றன. அவர்கள் நூல் நிலையத்தை தீயிட்டு கொளுத்தினார்கள். டி.பி.எஸ் ஜெயராஜின் கால்களை முறித்தார்கள். கனேடிய தமிழ் ஒலிபரப்பு என்னும் வானொலிச் சேவையை நடத்த விடாமல் தடுக்க முனைந்தார்கள் பாரிசில் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இவ் அச்சுறுத்தலானது இலங்கையில் மட்டும்தான் இருக்கின்றது என்பதில்லை. அது உலகளாவியதாக இருக்கிறது.

-தமிழ் சமூக செயற்பாட்டாளர், ரொரன்டோ, ஜனவரி 2006.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே 1983ம் ஆண்டிற்கும் 2002ம் ஆண்டிற்கும் இடையே மோதல நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்த ஆயுத மோதல்களின் காரணமாக 60,000 அல்லது அதைவிட கூடுதலான உயிர்கள் பலி கொள்ளப்பட்டது. இரு தரப்பினரும் மேற்கொண்ட மோசமான மனித உரிமை மீறல்கள் இந்த யுத்தத்தின் சாராம்சம் ஆகும்.

இவ் யுததமானது இலங்கைத் தமிழர்களில் கால்வாசித தொகையினரை நாட்டை விட்டு வெளியேறச் செய்துள்ளது. இவர்கள் பெரும்பாலானோர் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்கள் காரணமாகவே வெளியேறியுள்ளனர். அவ்வாறு வெளியேறி இன்று உலகெங்கும் வாழும் புலம் பெயர் தமிழ் சமூகத்தின் எண்ணிக்கையானது பல மடங்காக 6,000,00 இற்கும் 8,000,00 இற்கும் இடைப்பட்டத் தொகையாகும்.

புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் கனடா, இங்கிலாந்து உட்பட ஏனைய மேற்கத்தேய நாடுகளில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளதனால் அவர்கள் இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ் சிறுபான்மையினருக்காக தமிழீழம் என்னும் சுதந்திரமான நாடு ஒன்றை நிறுவுவதற்கு புலிகள் இயக்கத்தினால நடத்தப்படுகின்ற போராட்டத்திற்கு அரசியல் ரீதியானதும், மற்றும் நிதி ரீதியானதுமான ஆதரவினை வழங்குகின்றன. மிகவும் குறிப்பிடத்தக்க மூல கருத்தாக்களாக ஆகியிருக்கின்றனர்.

இப் புலம் பெயர் தமிழ் சமூகத்தினரிடையே பலர் புலிகள் இயக்கத்துக்கு தீவிரத்துடனும் விருப்பத்துடனும் தமது ஆதரவை வழங்கினர். அதே வேளை ஏனையவர்கள் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தலுக்கும் பலாத்கார பணப்பறிப்புக்கும் உடல் ரீதியான தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியதாக உள்ளனர். இதற்குக் காரணம் புலிகள் இயக்கமானது தமது மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான விமர்சனங்களை ஒடுக்கி அதன் மூலம் தமக்கான தங்குதடையற்ற பண வருமானத்தை உறுதி செய்யும் அதன் நோக்கமேயாகும்.

புலம் பெயர் சமூகத்திடையே, புலிகள் இயக்கத்தினை வெளிப்படையாக விமர்சிக்கும் பத்திரிகையாளர்கள மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் கடுமையான தாக்குதல்களுக்கும் மரண அச்சுறுத்தல்களுக்கும், அவதூறு பிரச்சாரங்களுக்கும் மற்றும் இட்டுக் கட்டப்பட்ட கிரிமினல் குற்றச் சாட்டுக்களுக்கும் முகம் கொடுக்க நேரிடுகிறது. 2005ம் ஆண்டில் புலிகள் இயக்கமானது இலண்டனில் உள்ள ஒரு இந்துக் கோயிலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பிரிட்டிஷ் பிரஜைகளான இரு தமிழர்களை பல வாரங்கள் இலங்கையில் தடுத்து வைத்திருந்தனர். இவ்வாறான சம்பவங்கள் தமிழ் சமூகத்தினரிடையே பீதி தரும் கலாச்சாரத்தை உருவாக்கி, மாற்றுக் கருத்துக்களை நெரித்து, தனி நபர்கள் புலிகளின் அனுமதியின்றி எவ்வித நிகழ்ச்சிகளையும் நடத்த முடியாத ஒரு தயக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது.


---------------1994 மே மாதம் டொரன்டோவில் உள்ள தமிழ் வள நிலையமானது, அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நோக்கத்துடன் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

புலிகள் இயக்கமானது பல வருட காலமாகவே தமிழ் சமூகத்தினரை தமது நடவடிக்கைகளுக்கு நிதி ரீதியான ஆதரவினை வழங்கும்படி நெருக்கி வருகிறது. வடகிழக்கில் 2005 இன் பிற்பகுதிகளில் இருந்து 2006 முற் பகுதிகளில் நிகழ்ந்த ஆயுத மோதல்கள் கடந்த நான்கு வருட காலங்களாக அமுலில் இருந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியது. இச் சூழலைப் பயன்படுத்தி புலிகள் இயக்கமானது "இறுதி யுத்தத்திற்கு" நிதி தேவை என்ற வேசத்துடன் மா பெரும நிதி திரட்டல் நடவடிக்கையை கனடாவிலும் ஐரோப்பாவிலும் முடுக்கி விட்டு தமிழ் வர்த்தகர்களையும் புலம் பெயர்ந்த தமிழர்களையும் பணம் தருமாறு நெருக்கியது.

புலிகள் இயக்கத்தினரும் அவ் இயக்கத்தோடு தொடர்புடைய ஸ்தாபனங்களைச் சேர்ந்த நிதி சேகரிப்பாளர்களும், வீடு வீடாகச சென்றும் வர்த்தக நிலையங்கள், மற்றும் தொழில் புரியும் நபர்களை அணுகியும் தமது நடவடிக்கைகளுக்கு ஆதரவாக கணிசமானதொரு நிதித் தொகையினை தரும்படி கட்டாயப்படுத்தினர். கனடாவில் வாழும் குடும்பங்கள் கனேடிய டாலர்கள் 2,500க்கும் 5,000 த்திற்கும இடைப்பட்ட தொகையினை கட்டாயமாக வழங்க வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டதோடு, சில வர்த்தக ஸ்தாபனங்கள் 100,000 கனேடிய டொலர்களை வழங்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளனர். இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே மற்றும் ஏனைய பல ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் சமூகத்தை சேர்ந்தவர்களிடமும் இதற்கு சமனான தொகைகள் வழங்கப்படல் வேண்டும் என்று கேட்கப் பட்டுள்ளது.

இதற்கு மறுப்புத் தெரிவித்த தனி நபர்கள் சிலவேளைகளில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பணம் கொடுக்க தவறுபவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்களைப் பார்ப்பதற்கு இலங்கைக்கு செல்ல முடியாது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். ஏனைய பலர், "உங்களை கவனித்துக் கொள்கிறோம்" அல்லது "நல்ல பாடம் புகட்டப்படும்" என்றெல்லாம் எச்சரிக்கப்பட்டுள்ளனர். தான் 20,000 கனேடிய டொலர்களுக்கு மேற்பட்ட தொகையினை வழங்க மறுத்ததிற்காக புலிகள் இயக்கத்தின பிரதிநிதிகள் தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எதிராக அச்சுறுத்தல் விடுத்ததாக டொரன்டோவில் இருக்கும் வர்த்தக உரிமையாளர் ஒருவர் கூறினார்.

புலிகள் இயக்கத்தினரும் அவர்களோடு தொடர்புடைய உலகத் தமிழர் இயக்கம் போன்றவர்களும் தொடர்ச்சியாக திரும்பத் திரும்ப தமிழ் குடும்பங்களுக்கு தொலைபேசி அழைப்புக்களை விடுத்து தமக்கு நிதி வழங்கும்படி நச்சரித்தனர். சில குடும்பங்களின் வீடுகளுக்கு. ஒரு கிழமைக்குள் மூன்று தடவைகளுக்கு மேல்கூட இவர்கள் சென்றுள்ளனர். அக்குடும்பத்தினர்கள், தாங்கள் நிதி வழங்குவோம் என உறுதி கூறும்வரை, இந்த நிதி சேகரிப்பாளர்கள் அவர்களின் வீடுகளை விட்டு வெளியேறவும் மறுத்துள்ளனர். அது மட்டுமன்றி தங்களிடம் தற்போது பணம் கையிருப்பில் இல்லை எனக் கூறியவர்களிடம், யாரிடமாவது கைமாறாக பெற்றுத்தாருங்கள், அல்லது உங்களுடைய வங்கிக்கடன் அட்டைகளைப் (Credit Cards) பாவித்து அல்லது உங்கள் வீடுகளை




அடைமானம் வைத்து பணம் பெற்றுத் தாருங்கள் என்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்கமானது வெளிநாடுகளில் இருந்து தமது குடும்ப உறவினர்களைப் பார்ப்பதற்காக இலங்கைக்கு செல்லும் தமிழர்கள் பற்றிய விபரங்களை தெரிந்து வைத்துக் கொண்டு, இலங்கையில் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குள் அவர்கள் சென்றதும், அவர்களிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக மிகத் திட்டமிட்ட முறையில் அவர்கள் மீது அழுத்தங்களை இடுகின்றனர்.

------இவ்வறிக்கை எழுதப்படும் போது கனேடிய டொலர் ஒன்றின் பெறுமதி அமெ. டொலர் 0.87 அல்லது 0.50

இவ்வாறு வெளிநாட்டில் இருந்து சென்றவர்களிடம் அவர்கள் அந்நாடுகளில் வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டு, ஒரு நாளைக்கு ஒரு டொலர், ஒரு யூரோ, ஒரு பவுண்ட் என்னும் தொகையானது புலிகள் இயக்கத்தினால் அறவிடப்படுவதற்கான "வரையறுக்கப்பட்ட" தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி வெளிநாடுகளில் இருந்து சென்ற தனிநபர்கள் ஆயிரக் கணக்கில் நிதியை கொடுக்க வேண்டியிருப்பதோடு, அவ்வாறு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்கத் தவறும் பட்சத்தில், அவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாது எனவும் கூறப்பட்டுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் இத் தொகையினைக் கொடுக்கும் வரை அவர்களின் கடவுச்சீட்டுகளைக் கூட புலிகள் இயக்கத்தினர் பறிமுதல செய்து வைத்துள்ளனர்.

யுத்த காலகட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல் செயற்பாடுகளை புலம்பெயர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பலர் இன்னமும் தெளிவாக நினைவில் வைத்திருப்பதனால், அவர்கள் புலிகள் இயக்கத்திற்கு தாமாகவே விரும்பி நிதி உதவி செய்கின்றார்கள். அவர்கள் புலிகள் இயக்கத்தினை தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் நியாயபூர்வமான முக்கியமான பிரதிநிதிகளாகவே காண்கின்றனர். சுதந்திரமானதொரு தமிழ தேசத்தை நிலை நிறுத்துவதற்கான தமது இலக்கினை அடைவதற்கு புலிகள் இயக்கமானது இராணுவ ரீதியான வழிமுறைகளை பயன்படுத்துவதையும் அவர்கள் ஆதரிக்கின்றனர்.

தமிழ் சமுதாயத்தைச் சேர்ந்த ஏனைய அங்கத்தவர்கள், ஒன்றில் தமது தனிப்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக, அல்லது புலிகள இயக்கத்தின் குறிக்கோள் மற்றும் அவர்களின் வழிமுறைகளை ஏற்றுக் கொள்ளாத காரணங்களினால் அவ்வியக்கத்திற்கு ஆதரவையோ பங்களிப்பினையோ வழங்க விரும்பவில்லை. இன்னும் சில புலிகள் இயக்கத்தினால் அழிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் ஆதரிக்கின்றனர்.

எவ்வாறாயினும், கடந்த நான்கு வருட யுத்தநிறுத்த காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தினால், தொடர்ச்சியாக சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கைகள், அரசியல் படுகொலைகள் உட்பட ஏனைய மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, தொடர்ச்சியாக புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக அவர்களை ஆதரிக்காத இந்த தனிநபர்களும்கூட அவ் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக நிதி உதவி வழங்க நிர்ப்பந்திக்கப்படலாம்.

புலிகள் இயக்கமானது. தமக்கான நிதி ஆதரவுக்காக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தின் மீது தங்கி நிற்பதானாலும், அச் சமூகத்தினரின் எண்ணிக்கையானது கணிசமான தொகையாக இருப்பதாலும், இப்புலம் பெயர் தமிழ் சமூகமானது, புலிகள் இயக்கம் மனித உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உட்பட, அதன் கொள்கைகள் மற்றும் நடத்தைகள் தொடர்பாக காத்திரமானதும் தனித்துவமானதுமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறது. இருந்த போதிலும், அவ்வல்லமையானது புலிகள் இயக்கத்தினால் அச்சமூகத்தினுள் மிகத் திறம்பட மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்கள் மற்றும் பலாத்கார பணப் பறிப்பு நடவடிக்கைகள் என்பவற்றின் மூலமாக பயனற்றதாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பெருந்தொகையாக தமது நாடுகளுக்குள் வந்து குடியேற அனுமதித்துள்ள பிற நாடுகளின் அரசாங்கங்கள், அத்தமிழ் சமூகத்தில் உள்ள தனிநபர்கள் மீது நிகழுகின்ற இவ்வாறான அத்துமீறல் சம்பவங்களில இருந்து அவர்களை பாதுகாக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளன.

ஆனால், இவ் அத்துமீறல்களுக்கு எதிராக தாங்கள் மிகச் சிறிய அளவில் மாத்திரமே நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், இவ்வாறான சம்பவங்கள், அத்துமீறல் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாம் அதிக முன்னுரிமை வழங்குவதில்லை என்பதையும் அவ் அரசாங்கங்கள் ஒத்துக்...

தொடரும்.......

# தம்பிராசா இரத்தினம்மா காலமானார்

### தார்மீக ஆவேசமும் தற்துணிவும் கொண்ட மனுசியின் மரணம்

தம்பிராசா சுபத்திரன் தோழர் றொபேட்டின் தாயார் இரத்தினம்மா தம்பிராசா 26-03-2006 அன்று கனடா ரொறன்ரோவில் காலமானார்.

தோழர் றொபேட்டின் மறைவிற்கு பின்னர் மிகவும் தளர்நிலையடைந்திருந்தார். கடுமையாக நோய்வாய்பட்ட நிலையில் தனது இறுதி நாட்கள் வரை வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார்.

தமிழ் பாசிசத்திற்கெதிரான இவரது போரா்ட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தோழர் றொபேட்டின் தந்தையார் தம்பிராசா அவர்கள் சாவகச்சேரி நுணாவிலில் உள்ள அவரது வீட்டில் இருந்து புலிகளின் இன்றைய விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா குழுவினரால் 1989 இல் கடத்தி செல்லப்பட்ட போது தன்னந்தனியாக நின்று அவர்களுடன் போராடியவர்.

பின்னர் 1990 இல் இரத்தினம்மா அவர்கள் பாப்பா குழுவினரால் கடத்திச செல்லப்பட்டார். அப்போதும் இவர் "நான இவர்களுக்கு அடிபணியமாட்டேன், எனது கணவனை இவர்கள் கொன்றவர்கள். இவர்கள் எனது வீட்டில் உள்ள எதனையும் சூறையாடிச்செல்ல அனுமதிக்க மாட்டேன், வேண்டுமானால் ஊரவர்கள் அயலவர்கள் எடுத்துக் கொள்ளட்டும்" என்று தான் புலிகளால் கைதுசெய்யப் பட்ட நிலையிலும் துணிந்து நினறு குரல் எழுப்பியவர். "நான் சாவதற்கு அஞ்சவில்லை எனது கணவரையும் இவர்கள் தான் கொலை செய்தவர்கள்" என்று புலிகளின் முகத்திரையை கிழித்து அம்பலப்படுத்தியவர். பாசிசக் கும்பலுக்கு நடுவில் தன்னந்தனியாக குரல் கொடுத்தவர். ஊரில் கம்பீரமாக சக மனிதர்களுடன் வாழ விரும்பிய அவரை அவரின் முதிய வயதிலும் புலிகளின் சிறை, வங்கக்கடலில் படகில், இந்தியாவில் சென்னையில், ரொறன்ரோவில், கொழும்பில் என தமிழ் பாசிசம் அலைக்கழிய விட்டிருந்தது. தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் புலிப்பாசிசம் ஏற்படுத்திய அனர்த்தங்களுக்கு றொபேட்டம்மாவின் வாழ்க்கை ஒரு சாட்சியமாக அமைந்திருந்தது. பெரும் சூறைக்காற்றல் சிக்கிய படகு போல் அவரின் வாழ்வு அமைந்திருந்தது

இவரைக்கடத்திச் சென்ற புலிகள், அவர்களால் துரோகி முத்திரையிடப் பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த ஐம்பதிற்கு மேற்பட்ட குடும்பங்களுடன் சேர்த்து படகு மூலம் இந்தியாவிற்கு நாடு கடத்



தினர். தனது மகன் றொபேட் சுபத்திரன மீது அவர் அளவு கடந்த அன்பைக் கொண்டிருந்தார். தனது வாழ்நாள் பணி என்பது தனது மைநதனுக்கு உதவுவதே என்று அவர் வாழ்ந்தார்.

வழமையாக அதிகாலைப்பொழுதில் தோழர் றொபேட்டுடன் தொலைபேசியில் பேசுவார். அவருடன் பேசிய பிறகே மொட்டை மாடியில் சென்று பயிற்சியில ஈடுபட்டிருந்தபோது றொபேட் தோழர் புலிகளால் ஏவப்பட்ட சினைப்பர் குண்டிற்கு பலியானார்.

தோழர் றொபேட் 80களின் நடுப்பகுதியில் வெலிகடைச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவரைப் பார்வையிட வரும் போது தம்பிராசா இரத்தினம்மா தம்பதிகள் சகல அரசியல் கைதிகளுக்குமாகச சேர்த்தே உணவுப் பொதிகளை கொண்டுவருவார்கள். போராட்டதில் ஈடுபட்டவர்களை ஆதரித்து போசித்த குடும்பமது.

அவர் தனது சொந்த வாழ்க்கையினூடு பாசிசத்திற்கெதிராகப் போராடினார். நாகரிகமான மனித வாழ்க்கைக்காக போராடியார். அவர் எமது தோழர்களால் றொபேட் அம்மா என்றே அழைக்கப்பட்டார். அவர் அனுபவித்த துன்பங்கள் பிரத்தியேகமாக பதிவு செய்யப்படவேண டியவை. 2003 ஜீன் 19 இல் தனது உன்னத புதல்வனின் உயிரற்ற உடலை அவர் காண நேர்ந்த போது அவருக்கு இந்த உலகமே சூனியமாகிவிட்டது. போன்று மனமொடிந்து போனார். அவருக்கு புதல்வியும் பேரப்பிளைகள் இருவரும் இருக்கிறார்கள்.

அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் ஈபிஆர்எல்எப்- பத்மநாபா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா:.பியாக்களின் ராச்சியத்தில்......

கள்ளக்கடத்தல் பாரம்பரியத்தின் இளவல், புலி மா∴பியா கூட்டத்தின் தலைவர் அவருக்கோ அவரது அயோக்கிய ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்துக்கோ மாற்று தமிழர்கள் மீது அவதூறு சொல்ல எந்த அருகதையும் கிடையாது. மாற்று தமிழ் கட்சிகளை ஒற்றர் படை என்றும், ஒட்டுப்படை என்றும், நையாண்டியும், நக்கலும் கலந்து வசைபாடும் இவர்கள் யார்?

கடந்த கால் நூற்றாண்டாக தமிழர்கள் மீது, மாற்று சமூகத்தவர் மீது, சர்வதேச தலைவர்கள் மீது, கல்விமானகள் மீது கொலை வெறியை கட்டவிழ்த்து சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்கு பிடித்துச் செல்லும் இவர்கள் சர்வதேச போதைவஸ்து வியாபாரத்திலும், ஆயுதக் கடத்தலிலும், பயங்கரவாத நடவடிக்கைகளிலும் உலகத்தின் ஜாம்பவான்களான கிரிமினல்கள் அத்தனைபேரையும் இவர்கள் மிஞ்சக்கூடியவர்கள். இவர்கள் மனித குலத்தின் எதிரிகள், எதிர்கால நம்பிக்கைகளின் எதிரிகள், சமூக வளர்ச்சியின் எதிரிகள்

இலங்கையில் தமிழ்ச்சமூகம் பெறக்கூடியதாக இருந்தவற்றையும் தட்டிப் பறித்தவர்கள். சமூகங்களிடையே மிக மோசமான விரிசலை ஏற்படுத்திய விஷ ஜந்துக்கள், சார்ஸ் வைரஸ், பறவை காய்ச்சல், எயிட்ஸ் போன்ற அபாயகரமான நோயகளை விளைவிபவற்றை விட மோசமான நச்சுக் கிருமிகள்.

இந்தப் பிரகிருதிகள் ஹிட்லரின் பாசிசம், சிசிலியின் மா∴பியா, கம்பூச்சிய பொல்பொட்டிசத்தின் ஒட்டுமொத்த வடிவங்கள்.

இவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு கொலை புரிகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகார அபிலாஷைகளை பெருக்கிக் கொள்ள முடியும் எனக் கருதும் மானிட விரோதிகள். சமாதானத்திற்கு விலையாக அவர்கள் கொலையையே முன்மொழிகிறார்கள். மிகப் பிரபலம்வாய்ந்த சாவு வியாபாரிகளான இவர்கள் இலங்கையின் வடக்கு கிழக்கில் ஒரு விஸ்தாரமான சுடுகாட்டை நிர்மாணிக்க முயல்கிறார்கள். ஏற்கனவே வடக்கு கிழக்கு பாதி சுடுகாடாக மாறிவிட்டது. தற்போது மீதியையும சுடுகாடாக்கி ஒரு பூரண சுடுகாட்டை உருவாக்கி அதனை தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைகிறார்கள்.

இவர்கள் வீரர்கள் அல்ல. இவர்கள் பீதியில் அலைந்து திரிகிறார்கள். மக்களில் நம்பிக்கையில்லை. மக்கள் என்றோ ஒருநாள் தங்களை தூக்கியெறிந்து விடுவார்கள் என்று கருதி மாற்றுக் குரல்களை சுவடே இல்லாமல் அழிக்க முயல்கிறார்கள் ஒரு சுடுகாட்டு அமைதியை எமது சமூகத்தில் பிரசவிக்க முனைகிறார்கள். அதற்காகத் தான் அவர்கள் துணைப்படை, ஒட்டுப படை என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

வஞ்சகப் பேய்கள் என்பார். இந்த மரத்தில் என்பார். அந்த குளத்தில் என்பார், துஞ்சுது முகட்டில் என்பார் என்று இவர்கள் புரளி கிளப்புகிறார்கள். ஜெனீவாவில் துணைப்படைகளின் இருப்பிடங்கள் பற்றி யார் யார் அங்கத்துவம் வகிக்கிறார்கள் என்பது பற்றி விலாவாரியாக சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் அரசிடம் கொடுத்திருக்கிறார்களாம் இந்த பேர்வழிகள்.

வடக்கு கிழக்கில் மாற்று கட்சிகளின் இருப்பிடங்கள் என்பதும், காரியாலயங்கள் என்பதும், அவற்றின் அங்கத்தவர்கள் எனபதும் பகிரங்கமான விடயங்கள். இது சர்வதேச சமூகத்துக்கும் தெரியும், அரசுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும் இவர்கள் இங்கு புதிதாக "காட்டாப்பு" காட்டுகிறார்கள். புலிகளின் அரசியல் ஆலோசகர் எனபடும் அந்த நாலாந்தரப் பேர்வழி தனது பேட்டிகளில் உளறித்தள்ளுகிறார். ஊளையிடுகிறார். தாங்கள்தான் தாய் இயக்கம். மற்றவர்கள் எல்லாம் அப்படியொன்றும் அற்றவர்கள் அவர்களுக்கு என்றும் ஒன்றும் கிடையாது எல்லாம் நாங்களே. "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதியும்" என்று கூக்குரல் இடுகிறார். உண்மையில் கூட்டுறவு சங்கக்கடை கொள்ளையன் தனபால சிங்கம் செட்டிதான் பிரபாகரனின் ஞான குரு. அந்த செட்டியையும் பிரபாகரன் தான் கொலைசெய்தார் என்பது இன்னுமொரு கதை. செட்டியிசம் தான் பிரபாகரனால் உள்வாங்கப்பட்டவை. இப்போது தாய் இயக்கம், தந்தை இயக்கம் என்று புனிதப்படுத்தும் வேலைகள் நிகழ்கின்றன.

இவர்கள் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் எத்தனை உன்னதமான மனிதர்களை அழித்தொழித்தார்கள் என்பதை வரலாறு தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். தமிழ் சமூகத்துக்கு சர்வநாசம் விளைவித்தவர்கள் இவர்கள் என்பது பலருக்கும் தெரிந்த சங்கதியே. என்றோ மலரப்போகும் ஒரு சுதந்திரமான சூழலில் பிரபாகரன் என்றொருவரும், அவரது அடியாள் கூட்டமும் எம்மத்தியில் ஆதிக்கம் வகிக்க அனுமதித்து விட்டோமே என்று தமிழ்ச் சமூகம் வெட்கப்படத்தான் போகிறது. தற்போது போக்கிரி பத்திரிகையாளர்களும், மோசடி பேர்வழிகளும், மனித மரணங்களில் குளிர்காய்பவர்களும் புலிகளுக்கு சாமரம் வீசிக் கொண்டு வீழ்ந்து கடக்கிறார்கள் இந்த வெட்கம்கெட்ட பிறப்புக்களின் பித்தலாட்டங்களை எல்லாம் விஞ்சி உண்மை என்றோ பிரகாசமாக எழத்தான் போகிறது.

சர்வதேச சமூகம் சில விடயங்களை புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களின் அபிலாசை என்பது அவர்களின் மனித உரிமை, ஜனநாயக உரிமைகளில் இருந்து பிரித்து பார்க்க முடியாத அம்சங்கள். புலிகள் விடும் துணைப்படை புரள்யைவிட்டு இவர்கள பரோபகாரமாக நடந்து கொள்வார்களானால் அது முழு தமிழ் மக்களையும் நரகப்படுகுழியில் தள்ளுவதாகவே அமையும். உண்மையில் புலிகள் ஜெனீவாவிலோ, தாய்லாந்திலோ, நோர்வேயிலோ, இந்தியாவிலோ பேசுவதற்கு அருகதையற்றவர்கள். சாதாரண சராசரி மனித பண்புகள் இல்லாதவர்கள். இவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் அடிபணிவது தமிழ் மக்களை விபரீதமான ஒரு நிலைக்கு இட்டுச் செல்வதாகவே அமையும்.

புலிகள் துணைப்படை, ஒட்டுப் படை என்று புரளி கிளப்பும் போது இதில் காலவிரயம் செய்வது மிகவும் ஆபத்தான விடயமாகும். அவர்கள் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மூன்றாம் உலக இளந் தலைவர் ராஜீவ் காந்தியை, தமிழர்களின் தலைவர்களான அமிர்தலிங்கம், பத்மநாபா, ஸ்ரீ சபாரட்ணம், வாசுதேவா, சரோஜினி யோகேஸ்வரன், தங்கத்துரை, செழியன பேரின்பநாயகம், சாம் கலா தம்பிமுத்து போன்றவர்களை படுகொலை செய்யும போது, பள்ளிவாசல்களில் முஸ்லீம்களை படுகொலை செய்யும் போது, கல்விமான்களை, சாதாரண பொது மக்களை, அரசியல் கட்சியின் அங்கத்தவர்களை, ஆதரவாளர்களை கொலை செய்யும் போது யாருடைய துணைப்படைகளாக அவர்கள் செயற்பட்டார்கள் என்ற முக்கியமான கேள்வி இருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தான் கருணா புலிகளின் தளபதி. தற்போது துணைப்படை. இது எமது உள்விவகாரம் அதனை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று அப்போது ஆரவாரித்தார்கள். இப்போது அரசாங்கம் அவரை கட்டுப்படுத்த வேண்டும் என்கிறார்கள்.

புலிகள் கொலை புரிவதற்கு, மக்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கு, கப்பம் வாங்குவதற்கு, போதைவஸ்து வியாபாரம் செய்வதற்கு, கண்ணிவெடிகளை புதைப்பதற்கு வடக்கு கிழக்கை சுத்தமாக்கி தம்மிடம் ஒப்படைக்குமாறு பயங்கரவாத முறையில் கோ

தொடர்ச்சி 04ம் பக்கம்

# தமிழ் மக்களின் மீதான.......................

02ம் பக்கத் தொடர்ச்சி

இழக்க நேரிட்டது. அவரின் மெய்ப் பாதுகாவலர் பலியானார்.

இச்சம்பவத்தையடுத்து என்ன விபரீதம் நிகழப் போகிறதோவென யாழ் நகரமே அச்சத்தில் ஆழ்ந்திருந்தது.

ஆனால், இச்சம்பவத்துடன் உருக் கொண்ட அந்த வபரீதம் தம்மை நோக்கி திசை திரும்பப் போகிறது என்ற ஆபத்தை அந்தச் சிறை முகாமில் அடைக்கபட்டிருந்தவர்கள் எவரும் அறிந்திருக்கவில்லை. உண்மையில் அவர்களுக்கு வெளியே என்ன நடந்திருக்கிறது என்பதே தெரியாதிருந்தது.

தைரி மேல் மாடியில் உள்ள அறையில் அடைக்கப்பட்டிருந்தார். சாப்பாட்டு வேளைகளில் அவர்களைத் திறந்து விடுவர். அதுவும் சாபபாட்டு வேளையாக இருந்ததால் அவர்கள் கீழே இறங்கி வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சுமார் 9.15 இருக்கும்,

திடீரென அம்முகாமை நோக்கி வெடிச்சத்தங்கள் கேட்டன. முதலில் அது மிஸ்∴பயர் (தவறுதலான துப்பாக்கி வெடி) என்று தான் யாவரும் எண்ணினர். அம்முகாமில் நீண்ட நாள் இருந்ததில் தாம் கொல்லப்படுவோம் என்று எவ்ரும் எண்ணியிருக்கவில்லை. ஆனாலும், ஏதோ ஒரு உள்ளுணர்வால உந்தப்பட்ட தைரி குசினியை அண்டிய முடுக்கொன்றில் மறைந்துகொண்டார்.

அவ்வேளை அருணா என்ற புலி உறுப்பினர் தனது 5, 6 உதவியாளர் சகிதம் மூர்க்காவேசத்துடன் உள்ளே புகுந்தான். அவன் வந்த வேகத்தில் வலது புற மூலையிலிருந்த அறையில் அடைத்து வைககப்பட்டிருந்தவர்கள் மீது, எம்-16 யந்திரத் துப்பாக்கியால் ஹிப் பொஸிஷனில் நின்று சரமாரியாகச் சுட்டான்.

துப்பாக்கியின் மகஸீன் தீர்ந்ததும், உதவியாளர்களிடமிருந்து மறு மகஸீன் வாங்கிப்போட்டு மறுபடி சுட்டான், சுட்டுவிட்டு அருகில் இருந்த மாடிப்படிகளால ஏறி மேல் மாடிக்குச் சென்றான்.

அந்த வீட்டின் முகப்பில் பெரிய ஹோலிருந்தது. அதில் எதிரே இரு அறைகளிலும் கைதிகள் இருந்தனர். ஒரு அறையிலிருந்து மறு அறைக்கு வர வழியிருந்தது. இடப்புறமாக குசினியும் வலப்புற அறைக்கு அருகே மாடிப் படிகளும் இருந்தன.

வலப்புற அறையில் சூடுபட்டவர்கள் இடப்புற அறைக்குள் ஓடினார்கள் மேல் மாடிக்குச் சென்ற அருணா அங்கும் வெடிகளைத் தீர்த்துவிட்டு திரும்ப இறங்கி வந்து இடப்புற அறைக்குள்ளிருந்தவர்களை நோக்கிச் சுட்டான் சிறிது நேரம் தொடர்ந்து சுட்டுவிட்டு திரும்பிப் போய்விட்டான்.

சூடுபட்ட அஜித் என்பவருக்கு கை முறிந்து எலும்பு தெரிய, வயிறு பிரிந்து குடல் வெளியே தள்ளியது. அதை முறிந்த கையின் எலும்பால் அழுத்திப் பிடித்துக்கொண்டு "தண்ணீர் தண்ணீர்" எனக் கத்தினான் வலப்புற அறையில் றெஜி என்ற நெடிய சிவலைப் பொடியனுக்கு ரத்தம் ஒழுகியபடியிருந்தது. பலருக்கு என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. யார் யார் சூடுபட்டனர், யார் யார் கொல்லப்பட்டனர் என்பதும் தெரியவில்லை.

தைரியும் இன்னும் சிலரும் வெளிக்கதவால் தப்பி ஓடினர். காவலில் நின்ற புலிகள் யாரடா என்று கத்தியபடி திரும்பச் சுட, ஓடி வந்தவர்கள் வெடிபட்டு கதவருகே விழுந்தனர். அவர்களோடு சேர்ந்து படுத்துவிட தைரிமேல் விழுந்திருந்த கங்கா என்பவருக்கு தலையில் வெடி பட்டு மூளை சிதறி தைரியின் முகம் மீது வடிநதது. இரத்தம் வெள்ளம போல் பரவியிருந்தது. தைரி அப்படியே இறந்தவர்களோடு இறந்தவன் போல் படுத்தபடி இருந்துவிட்டார். சென்றிக்கு இருந்தவர்கள் எஞ்சியிருந்தவர்களை இஷ்டப்படி எஸ்.எம்.ஜி களால் சுட்டனர். மேலே இருந்த மற்றைய இறந்த உடல்களும் இரத்தமும் தைரியை மறைத்திருந்தன.

அப்படிச் சடலங்களின் கீழ் புதைந்து கிடக்கையில வெடிபட்டவர்களின் ஓலங்களும் முனகல் சத்தங்களும் கேட்டபடி இருக்கிறது. உயிர் பிரிகையில் ஒவ்வொருவரது மரண ஓசையும் அடங்கிச் செலவது கேட்கிறது. அந்த ஓசை, குரல்வளை அறுபட்ட ஓர ஆட்டின் கதறல் போல், மனிதக் குரலேயற்ற வேறோர் பயங்கர குரலாக ஒலித்து, மூச்சிழுத்து, ஓய்வதைக் கேட்கும்போது உடல் அச்சத்தால் சில்லிட்டுப் போய்விடுகிறது.

கதிர் என்பவரும் வேறு சிலரும் மலசல கூடத்தின் மேல் இருந்த தட்டு ஒன்றுக்குள் ஏறி அங்கிருந்த புலித்தோலால் போர்த்தபடி பதுங்கிக் கொண்டனர்.

அருணா சுட்டு அதன்பின் சென்றிக்கு நின்ற புலிகளும் சுட்டு ஓய்ந்துவிட்டிருக்க, அடுத்ததாக சத்தியா என்பவன வந்தான். சத்தியாவின் கீழ் தான் அந்த முகாம் இருந்தது. முகாமின் பொறுப்பாளராக பாலு என்பவன் இருந்தான்.

சந்தியா வந்ததும் அரைகுறையாய் உயிரோடிருந்தவர்களைச் சுட்டுக் கொன்றான். சத்தியா பிஸ்டலால் தான் சுட்டான். பின்னர் மலசல கூடத்துக்குப் போய் அங்கே மேலே ஒளித்திருந்தவர்களை நோக்கி இறங்கடா கீழே என்று கத்தியபடி சுட்டான், சூடு பட்டவர்கள் தொப்பென விழும் ஓசை கேட்டது. கதிர் குப்புற விழுந்து கிடந்ததை, பின்னர் தைரி தப்பிச் செல்லும் போது காணமுடிந்தது.

இவ்வேளையில் வாகனச் சத்தம் கேட்டது வெளியே சென்ற அருணா திரும்பி வந்தான். அவன் வேறொரு முகாமில் வைத்திருந்த ராசீக், பாப்பா இருவரையும் இழுத்து வந்தான். வழமையாக இவ்விருவரையும் அருணாவும், சத்தியாவும் இம்முகாமுக்கு கொண்டு வந்து மிக மோசமாகத் தாக்கிவிட்டு திரும்பக் கூட்டிச் செல்வது வழக்கம். ராசிக் என்பவன் மிகவும் நெஞ்சுறுதி கொண்டவன். எவ்வளவு அடித்தாலும் "நானும் ஆண் மகன் தான்ரா, போராடத்தான் வந்தவன், சாவுக்கு பயப்பிட மாட்டன். நீ கொல்லுறதெண்டா கொல்லு" என்று எதிர்த்துக் கூறுவான். அவனை இனியில்லை என்ற அளவுக்கு அடித்து நொருக்குவார்கள்.

இத்தடைவ அழைத்து வரப்பட்ட போது முகாமிலிருந்த நிலைமையைப் பார்த்ததும் தமக்கு என்ன நேரப்போகிறதென்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது. "உங்களால என்ன செய்ய முடியும் சுடத்தான்ரா முடியும். நீங்கள் அழிஞ்சு தான்ரா போவியள், இருக்க மாட்டியளடா, எங்களை அவிழ்த்து விட்டுப்பாருங்கடா" என்று கத்தி இழுபறிப்படுகின்ற சத்தம் கேட்டது. சத்தத்தோடு சத்தமாக வெடி கிளம்ப ஐயோ ஐயோ என்ற ஓலம் எழும்பி படிப்படியாக ஓய்ந்து அடங்கியது.

அதையடுத்து அங்கு மௌனம் நிலவியது. அனேகமாக அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர். இரத்தம் கணுக்கால் அளவு உயரத்துக்கு இருந்தது. இரத்த வாடையும், வெடி மருந்து நாற்றமும் மண்டி இருந்தது.

அருணாவும் சத்தியாவும் இறந்த உடல்களை ஏற்றிச் செல்வதற்காக வாகனம் எடுத்துவர வெளியே சென்றனர். ஒரே அமைதி சிறிது நேரத்தில் தலை நிமிர்ந்து பார்த்த தைரி உயிரை கையில் பிடித்துக்கொண்டு மெதுவாக எழுந்து குசினிக்குச சென்று பின்புறமாக இருந்த கதவால் பாய்ந்து ஓடி அடுத்த வீட்டு வளவுக்குள் ஏறி விழுந்து தப்பிச் சென்றார். பின்புறமாக இன்னும் சிலர் தப்பிச் சென்றிருககக் கூடும். யார் யார் தப்பினார்கள் என்பது தெரியாது. ஆனால் முன்புறமாகத் தப்ப முயன்றவர்கள் சென்றியிடம் வெடிவாங்கி இறந்தார்கள்.

தைரி ஓடும்போது மீண்டும் வாகனம் வரும் சத்தம் கேட்டது. அநேகமாக உடல்களை அப்புறப்படுத்தவே வாகனங்களை அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இந்த உடல்கள் எங்கு புதைக்கப்பட்டன அல்லது எரிக்கப்பட்டன என்பது தெரியாது. கல்லுண்டாய் பகுதிக்குக் கொண்டுபோய் எரித்ததாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால் சம்பவ தினமன்று [illegible] மலசல கூடத்துக்கான குழி என்றே அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இது இவர்களைப் புதைப்பதற்கானதாக இருந்தால், கிட்டு தாக்கப்படுவதற்கு முன்னரே இக்கொலைத்திட்டம் தீட்டப்பட்டதாக இருந்திருக்க வேண்டும். கிட்டு மீதான தாக்குதல் அக்கொலைத்திட்டத்தை அன்றே நிகழ்த்த வழிசெய்திருக்கலாம். எவ்வாறாயினும் சுமார் 60 தமிழ் இளைஞர்கள் அந்த ஒரே இரவில் ஒரு வீட்டிற்குள் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட வரலாற்றுக் கறையை எப்படி எம்மவரால் நியாயப்படுத்த முடியும்?

இப்படி ஒரு படுகொலைச் சம்பவம் நிகழ்ந்ததை எப்படியோ அறிந்த அக் கைதிகளின் உறவினர்கள் சிலர் புலிகளின் முகாம்களுக்குச் சென்று வினாவினர். அப்படிக் கேட்ட போது புலிகள் பதிலளித்த முறை இப்படித்தான் இருந்தது. (அவ்வாறு கேட்கச் சென்ற ஒருவர் கூறியது இது)

புலிகள்:- கைதிகள் கொஞ்சப்போ் தப்பியோடப்பாத்தவை. அவையளைத் தடுக்க சுடுபாடு நடந்ததில் கொஞ்சப் பேர் செத்தவை.

உறவினர்:- (ஒருவரது பெயரை குறிப்பிட்டு) அவருக்க என்ன நடந்தது.

புலிகள்:- அவரில்லை

உறவினர்:- இல்லையென்றால் செத்திட்டாரோ?

புலிகள்:- ஓம்!

உறவினர்:- அப்ப பொடியை (உடம்பை) எண்டாலும் தாங்கோ, தாய் தகப்பனுக்கு அனுப்ப வேணும்.

புலிகள்:- (உறுக்கி) அப்ப இருங்கோ"

போனவர்கள் நீண்ட நேரமாக பதில் ஏதும் சொல்லாதிருக்கக் கண்டு, அவ் உறவினர்கள் உள்ளே போய் மீண்டும் அவர்களைக் கேட்டனர்.

உறவினர்:- தம்பி, ஒண்டும் பேசாமல இருக்கிறியள்.

புலிகள்:- உங்களுக்கெல்லே சொன்னனாங்கள் ஆள் இல்லையெண்டு.

உறவினர்:- பெடியையெல்லே கேட்டனாங்கள்

புலிகள்:- நாங்கள் எரிச்சுப்போட்டம்.

உறவினர்:- (சற்றுக் கோபத்துடன்) அப்ப எழுதித் தாங்கோ, இப்பிடி நடந்திட்டுதெண்டு.

புலிகள் முறைத்துப் பார்க்க ஏனையோர் விபரீதத்தை உணர்ந்து அவ்வுறவினர்களை சாந்தப்படுத்தி திருப்பி அனுப்பிவைத்தனர்.

இங்கே மனுக்கள், முறைப்பாடுகள், நீதிமன்றங்கள், விசாரணைகள், விசாரணைக்கமிஷன் எதுவுமில்லை. இந்தப் பதிலோடு விடயம் முடியவேண்டியது தான்.

ஏப்ரல் 2000 வெளியான அமுது சஞ்சிகையில் வெளியிடப்பட்ட "பிணங்களுடன் கிடந்து மீண்டேன்" என்ற ஆக்கம் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கறுப்பு ஜுலை படுகொலைகளை ஒத்த மார்ச் 30 படுகொலையின் போது கொலலப்பட்டவர்களின் நினைவாக பிரசுரிக்கப்படுகிறது.

புலிகள் சுமார் 60 ஏனைய இயக்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களை ஒரே இரவில் படுகொலை செய்த அந்த குரூரச் சம்பவம் நிகழ்ந்த இடம் நல்லூரில் உள்ள 'கந்தன் கருணை' எனும் வீடெனப் பலர் தவறாக கருதி வருகிறார்கள். அதனால் இச்சம்பவத்திற்கு கந்தன் கருணைப் படுகொலை என்ற பெயர் நிலைபெற்றுவிட்டது.

'கந்தன் கருணை' என்ற வீடு புலிகளின் ஓர் முகாமாகப் பாவிக்கப்பட்டது ஆனால் படுகொலை நடந்த வீடு யாழ் இந்துக்கல்லூரிக்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையில் உள்ளது.

புலிகளின் 87 மார்ச் 30 படுகொலையின் போது நேரடியாக கொலையில் ஈடுபட்ட அருணா இப்போது புலிகள் இயக்கத்தில் இல்லை. விஜயகுமாரதுங்காவின் முயற்சியால் 86 டிசம்பர் 22ம திகதி இரு இராணுவ வீரர்களை புலிகள் விடுவித்ததற்குப் பதிலாக அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்ட இரு புலி இயக்கக் கைதிகளில் ஒருவன் அருணா (மற்றவன காமினி) அருணா பின்னர் ஐ.பி.கே.எப் உடனான மோதல்களின் போது மதில் பாய்ந்து ஓடும்போது சுட்டுக்கொல்லப் பட்டான்.

1983 ஜுலைக் கலவரத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 தமிழ் அரசியற் கைதிகளை 23, 25 ம் திகதிகளில் இருமுறை படுகொலை செய்தது அன்றைய அரசாங்கம். அதனை நாம் இலங்கை அரசின் கொடுஞ்செயலுக்கு எடுத்துக்காட்டாக உலகெங்கும் பிரச்சாரம் செய்தோம்.

அச்செயலைக் கண்டித்து எத்தனையோ கட்டுரைகளும், கவிதைகளும் வெளியாகின. ஆனால், எம் விடுதலை போராளிகளாலேயே, விடுதலைப் போராட்டத்துக்கென முன்வந்த ஏனைய இயக்க உறுப்பினர்களும் அவர்களுடன் அடைக்கப்பட்டிருந்த பொதுமக்களுமாக 60 க்கும் மேற் பட்டோர் ஈவு இரக்கமின்றி ஒரே இரவில் சகட்டுமேனிக்க ஒருவர் மாறி ஒருவராகச் சுட்டுக் கொல்லப்பட்ட கொடுமைபற்றி யார் வினவினர்? யார் எழுதினர்? யார் கவிதை செய்தார்? இது வெலிக்கடைச் சிறைப் படுகொலையை விடக் கொடூரமான ஒன்றல்லவா? எம்மவராலேயே செய்யப்பட்டதல்லவா? இன்று காணாமற் போனோர் பற்றி நாம் அரசாங்கத்திடம் நியாயம் கோரிப் போராடுகிறோம். அன்று இரவோடிரவாகக் கொன்று புதைக்கப்பட்டோருக்காக யார், என்ன போராட்டம் நடத்தினார்கள்?

நன்றி:- அமுது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காந்தி
## வாழ்க்கைச் சித்திரம்
### பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து

ஜனவரி 1948 இல் மூன்று துப்பாக்கித் தோட்டாக்கள் காந்தியின் உயிரைப் பறிப்பதற்கு முன்பே, அவர் ஐம்பது வருடங்களாக அரசியல் அரங்கில இருந்து வந்திருக்கிறார். இந்திய தேச பக்தர்களின் இரு தலைமுறைகளுக்கு உணர்வூட்டிய அவர், ஒரு சாம்ராஜ்யத்தையே நிலைகுலைய வைத்ததோடு ஆபிரிக்க, ஆசிய தோற்றத்தையே மாற்றிவிடக்கூடிய புரட்சிக்கு அடிகோலியிருக்கிறார். எண்ணற்ற அவருடைய தாய்நாட்டு மக்களுக்கு அவர் ஒரு மகாத்மா, அதாவது மகத்தான ஆத்மா. அவருடைய புண்ணிய தரிசனமே ஒரு பொற்கரிய பேறாகும்.

1947இன் இறுதியில், இனப்பாகுபாடு, பிரிட்டிஷ் சாம்ராஜயத்தின் ஆதிக்கம் ஆகியவற்றிற்கு எதிராக அவர் முதலில் புரட்சிக்கொடி உயர்த்தியபோது எழுந்த பெருத்த சந்தேகங்கள், நையாண்டிகள், எதிர்ப்புகள் இவற்றை சமாளித்துவிட்டார். ஒரு காலத்தில் புராதனமானது, கற்பனையில் மட்டுமே பலனளிக்கக்கூடியது என நிராகரிக்கப்பட்ட இவரது சிந்தனைகள் உலகின் சிறந்த அறிவாளிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியது.

ஜூலை 1944ல் காந்தியைப் பற்றி ஐன்ஸ்டைன் இவ்விதம் கூறினார். "இனிவரும் சந்ததியர் வேண்டுமானால இத்தகைய ஒருவர் நிணமும் சதையுமாக எப்போதாவது இப் பூமியில் உலவினார் என்பதை நம்புவதற்கு மறுக்கலாம்".

அவருடைய வாழவு முடிவில்லாத தொடர் நாடகமாக விரிந்தபோதிலும், காந்தியைப் பொறுத்தவரை, அவர் பிற மனிதர்களைப் போல் மிகச் சாதாரணமாகத்தான் தெரிந்தார். சிறிது கூடப் படாடோபம் இல்லாத, சிறந்த அரசியல் வாதியையோ அல்லது அவ்வளவாகப் பிரபலமாக ஒரு செயல்வீரின் தோற்றத்தையோ கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. இடுப்பில் கட்டிய வேட்டி, எஃகு ஃபிரமிட்ட மூக்குக் கண்ணாடி, முரட்டு செருப்புகள், பொக்கை வாய்ச் சிரிப்பு, முணுமுணுப்பது போன்ற பேச்சு இவை அனைத்துடன் அவர் பிறரை வீழ்த்தும் எளிமையைப் பெற்றிருந்தார்.

குளிப்பதற்கு அவர் சோப்பிற்கு பதில் ஒரு கல்லைப் பயன்படுத்தினார். விரல்களுக்கிடையே இடுக்கிக் கொள்வதற்குக் கூட முடியாத புழுக்கைப் பென்சில்களைப் பிடித்துக்கொண்டு துண்டு காகிதங்களில் எழுதினார். ஒரு நாட்டுப்புற சவரக்கத்தியினால் முகம ழித்துக் கொண்டார். ஒரு கைதியின் கிண்ணம் போன்ற பாத்திரத்திலிருந்து மரக்கரண்டி கொண்டு சாப்பிட்டார்.

புத்தரின் புகழ் பெற்ற வார்த்தைகளில் நாம் சொல்லுவோமேயானால், அந்த மனிதர் "தன்னை மிகுந்த பற்றுடனும் தன்னடக்கம மற்றும் சுயகட்டுப்பாடுடன் உயர்த்திக் கொண்டு, எந்த வெள்ளமும் மூழ்கடிக்க முடியாதொரு தீவை தனக்கென ஏற்படுத்திக் கொண்டார்."

காந்தி ஆன்மிகத்தில் ஆழ்ந்த பற்று கொண்டிருந்தும், அவருடைய தேச மரபுபடி, முக்தி பெறவென இமாலயத்தில் உள்ள குகையொன்றில் தஞ்சம் புகவில்லை. அக்குகையை தன்னுள்ளேயே அவர் சுமந்தார். மனித நேய சேவையைத் தவிர வேறு எந்த மதத்தையும் அறிந்ததில்லை.

ஆனால் ஆன்மிகச்சட்டம் வாழ்வின சாதாரண நடவடிக்கைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுமேயல்லாது வெற்றிடத்தில் வேலை செய்யாது, என அவர் கூறினார். மதங்களின் வடிவத்தையன்றி அதன் ஆத்மத்துவத்தை வாழ்வின் அன்றாட நடவடிக்கைகளுடன் தொடர்பு படுத்திப் பார்க்கும் இந்த ஆர்வம், பரபரப்பற்ற அவரது மழலை பருவம், மெல்ல விரிந்த, கிட்டத்தட்ட தோல்வியையே தழுவிய அவருடைய இளமை, விருப்பமின்றி நேடால் அரசியலில் குதித்தது. தென் ஆபிரிக்காவில நீண்ட, சரிநிகரற்ற போராட்டம், அவர் தலைமையில் நடைபெற்று வெற்றியுடன் முடிந்த சோகக் கறை படிந்த பல்வேறு மாற்றங்கள கொண்ட இந்திய சுதந்திரப் போராட்டம், ஆகிய அனைத்தும் காந்தியின் பணியில் ஒரு நூலிழை போல் ஓடுகிறது.

#### குழந்தைப் பருவம்


மோஹன்தாஸ் காந்தி, இந்தியாவின் மேற்குக் கடற்கரையை ஒட்டிய போர்பந்தரில், அக்டோபர் 2, 1869ல் பிறந்தார். அவருடைய பாட்டனார் உததம்சந்த் காந்தியும், தகப்பனார் கரம்சந்த் காந்தியும், போர்ப்பந்தரில் திவான் (பிரதம மந்திரி) எனும் உயர் பதவி வகித்தார்கள். இளவரசர் ஆளுகைக் குட்பட்ட மாகாணம் ஒன்றில் திவானாயிருப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. அங்கு பிறந்த காரணத்தாலும், ஆங்கிலேயரின் ஆதரவாலும் அரியணையில் அமர்த்தப்பட்ட இளவரசர்களால் ஆளப்பட்ட, மேற்கு இந்தியாவில் இருந்த முந்நூறு "சுதேசி" சமஸ்தானங்களில் போர்பந்தரும் ஒன்று.

ஸ்திரப் புத்தியற்ற இளவரசர்கள், எதேச்சாதிகார பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆணவ போக்குமிக்க அரசியல் -பிரதிநிதிகள், பல காலமாக துன்புற்று வரும் மக்கள் இவர்களுக்கிடையே ஒருவர் திவானாக திறம்பட பணியாற்றுவதற்கு அவருக்கு அசாத்தியமான பொறுமை, சாதுர்யம், விவேகம் இவை வேண்டியிருந்தன. உத்தம்சந்தும், கரம்சந்தும் நல்ல ஆட்சியாளர்கள் என்பதோடு நேர்மையும், நியாயமும் கொண்ட மனிதர்கள். எசமான விசுவாசம் படைத்தவர்களாயினும், சீரணிக்க முடியாத புத்திமதிகளை கூறவும் அவர்கள் அஞ்சியதில்லை. இவ்வாறு தங்களுக்கு தோன்றியதைத் துணிவுடன் செயல்படுத்தும் தன்மைக்கு உரிய விலையை அவர்கள் கொடுக்க வேண்டி வந்தது. அவருடைய வீடு அரசுத் துருப்புக்களால் சூழப்பட்டு, குண்டு வீசி தாக்கப்பட்டதால், உத்தம்சந்த் மாகாணத்தை விட்டு ஓட நேர்ந்தது. அவருடைய மகன், தனது கொள்கைகளை விட்டுக்கொடுப்பதை விட, போர் பந்தரை விட்டுச் செல்வதையே மேலாகக் கொண்டார்.

அவரது மகனின் வார்த்தைகளில் கரம்சந்த் காந்தி "தனது வம்சத்தை நேசிப்பவர், உண்மையானவர், வீரமிக்கவர், தயாளர்." என்றும் வளரும் பிராயத்தில் இளம் மோஹன் தாஸ் மீது அவரது தாயார் புத்தலிபாயின் ஆதிக்கமே அதிகமிருந்தது. அரண்மனையிலுள்ள பெண்களுடன் நட்பு பூண்டு, அரசு வட்டாரத்தில் தனது முக்கியத்துவத்தை உணரச் செய்திருந்தாலும் அவருடைய முக்கிய கவனம் தமது குடும்பத்தின் மீதே இருந்தது. குடும்பத்தில் யாராவது நோய்வாய்ப் பட்டால் இரவும், பகலும் பணிவிடையில் அவர் தன்னையே வருத்திக் கொண்டார். அவரது வயது, அந்தஸ்தை ஒத்த மற்ற பெண்களுக்கு பொதுவாக இருப்பது போல், அவருக்கு நகை நட்டுகளில் அவ்வளவு நாட்டமிருக்கவில்லை சங்கிலித் தொடர் போன்று இடைவிடா விரதங்கள், நோன்புகளை கொண்டிருந்தது, அவரது வாழ்க்கை. அவரது உறுதியான நம்பிக்கை ஒன்றே அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ளும் சக்தியை அந்த மெலிந்த அந்த தேகத்திற்குக் கொடுத்திருக்க வேண்டும். அவர் தமது பகல் நேரத்தை வீடு, கோயில் எனப் பகிர்ந்து கொண்டதால், குழந்தைகளும் அவருடன் ஒட்டிக்கொண்டனர். அவரது விரதங்கள், நோன்புகள் அவர்களுக்கு புதிராக இருந்ததோடு, அவர்களை ஈர்க்கவும் செய்தன.


வழிபாட்டு நூல்களில் அவர் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தெரிந்த குஜாராத்தியைத் தவிர அவருக்கு சுத்தமாக எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் அவருடைய எல்லையில்லா அன்பு, முடிவற்ற மத ஒழுக்கக் கட்டுப்பாடுகள், இரும்பு மனம் ஆகியவை அவருடைய கடைக்குட்டி மோஹன் தாஸ் மனதில் ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்திவிட்டன. தன் தாயைப் பார்த்த அவர், பெண் என்றால் அன்பும், தியாகமும் கொண்டவள் என்று மனதில் பதித்துக் கொண்டார்.

அவளையொத்த தாயன்பை அவர் தனதாக்கிக் கொண்டார். அவர் வளர வளர, அது பெருக்கெடுத்து ஓடி, குடும்பம், சமுதாயம் ஆகிய தளைகளை உடைத்துக் கொண்டு மனித குலம் முழுமையுமே தழுவிக் கொண்டது. பிற்காலத்தில், ஆஸ்மரத்தில் தொழு நோயாளியின் காயங்களை அலம்பி விடக்கூடிய தாதிப் பெண்ணின் உத்வேகததிற்கும் காலங்காலமாகத் தாரங்களும், தாய்களும் பின்பற்றி வரும் உத்தியான- தன்னையே வருத்திக் கொண்டு பிறரின் இரக்கத்தைச் சம்பாதிக்கக் கூடிய உத்திக்கும், அவர் தம் தாய்க்குக் கடமைப்பட்டவராவார்.



தொடரும்......

# இதய அஞ்சலி



## தோழர் புஸ்பராஜா

மூன்றரை தசாப்தங்கள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையில் போராட்டகாரராகவும், ஈடுபாட்டாளராகவும் செயற்பட்ட தோழர் புஸ்பராஜா ... முன்னணியின் செயலாளர் நாயகம் அவர்களின் மறைவிற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

1970களின் முற்பகுதியில் தோழர் புஸ்பராஜா தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான இளம் தலைமுறையினரின் முன்னணி போராட்டக்காரராக திகழ்ந்தார். பிரபலமான கொழும்பு நாலாம் மாடி சித்திரவதைகளை புஸ்பராஜாவும் அவரது சகோதரி புஸ்பராணியும் அனுபவித்திருக்கிறார்கள்.

அவர் ஆரம்பத்தில் தமிழரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் பின்புலத்தில் அகிம்சை போராட்டத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்தார். வடக்கு கிழக்கில் பரவலாக நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டங்களுக்கு அவர் தலைமை ஏற்றிருக்கிறார். வடக்கு கிழக்கு மக்களை தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அணிதிரட்ட வேண்டும் என நீள அகலங்களில அலைந்து திரிந்த முன்னோடிகளில் ஒருவர்.

1970களின் நடுப்பகுதியில் தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ அல்ல) உருவாக்கத்தில் பங்கேற்றவர். இதன் பின்னரும் இவர் சித்திரவதை சிறை கூடங்களுக்கு நேர்ந்தது. பாரம்பரிய தலைமையின் செயற்பாடுகள் தொடர்பாக அவர் ஒரு ஜனநாயக அடிப்படையிலான கலகக்காரனாகவும், விமர்சனகனாகவும் திகழ்ந்தார்.

உரும்பிராய் சிவகுமாரன், சத்திய சீலன் போன்றவர்களுடன் இணைந்து செயற்படுவதில் சமூக ரீதியான அபிலாஷைகள் அவருக்கு இருந்தன.

பத்மநாபா, வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாள் ஆகியோருடன் 1970 களின முற்பகுதியில் இருந்தே இணைந்து செயற்பட்டவர்.

1980 களின் முற்பகுதியில் புலம் பெயர்ந்து பிரான்ஸக்கு சென்று அங்கும தனது அரசியல், சமூக பணிகளை தொடர்ந்தவர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்ஸ் முன்னோடி செயற்பாட்டாளர்களில் ஒருவராக அவர் மிக நீண்டகாலம் செயற்பட்டவர். பின்னர் சுதந்திரமான அரசியல் சமூக செயற்பாட்டளாராக தனது பணிகளை பலவருடங்கள் தொடர்ந்தார்.

பிரான்ஸில் புலம் பெயர் வாழ்க்கை புஸ்பராஜாவின் மீது புதிய பரிமாணங்களை உருவாக்கியது. பெண்களின் உரிமைகள், சமூக சமத்துவம் பற்றி புதிய வெளிச்சம் அவரிடம் உருவாகியது. இலக்கிய சந்திப்புக்களில் சமூக அரசியல் விவகாரங்களில் புலம் பெயர் தளத்தில் புஸ்பராஜா ஒரு முக்கியமான மனிதராக திகழ்ந்தார்.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து பிரான்சில் தஞ்சம் கோரிய இளைஞர் யுவதிகளுக்கு உதவி செய்வதில் தனது நண்பர்கள், தோழர்களுடன் இணைந்து இயலுமானவரை பணியாற்றினார்.

அவ்வப்போது இந்தியாவிற்கு வருகை தந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களுடனும் மற்றும் நண்பர்களுடனும் தனது உறவுகளை பேணியவர்.

ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற அவரது நூல் திருத்தப்பட வேண்டிய பல இடைவெளிகளை கொண்டிருப்பினும் அது முக்கியத்துவம் வாய்ந்த நூல். அவரது சில கருத்துக்களில் எமக்கு உடன்பாடு இல்லையேயாயினும் அவர் ஒரு ஜனநாயகவாதி, சமூக சாதகமான மனிதர் என்பதை மறுப்பதற்கில்லை.

புலிகளால் பாரிசில் படுகொலை செய்யப்பட்ட தோழர் சபாலிங்கம், காலம்சென்ற தோழர் உமாகாந்தன், தோழர் கலைச்செல்வன் வரிசையில் புஸ்பராஜாவும் முககியத்துவம் வாய்ந்த ஒரு மனிதர். காலத்தினூடு இம் மனிதர்களெல்லாம் விடைபெற்று சென்று விட்டனர்.

செக்கோசலாவாக்கிய ஊடகவியலாளர் ஜீலியஸ் பூசிக் தன்னை இன்னும் சில நாட்களில் தூக்கில் தொங்க விட்டுவிடுவார்கள் என்று தெரிந்து கொண்டு ஒவ்வொரு நாளும் சில குறிப்புக்களை எழுதினார். பின்னாளில அது தூக்கு மேடைக் குறிப்புக்கள் என ஒரு நூலாக வெளிவந்தது. இந் நூல் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டு சென்னை புக் ஹவுஸால் வெளியிடப் பட்டது.

இதேபோல் தனது மரணத்தின் திகதியை தெரிந்து கொண்டு புஸ்பராஜா தனது குறிப்புக்களை எழுதினார்.

அவர் இறுதியாக கூறிய வார்த்தைகளில் ஒன்று முக்கியமானது வெடிமருந்து வீச்சமில்லாத உன் தெருக்களில் எம் பிள்ளைகள் நடக்கின்ற நாள் என்று வரும் எம் மண்ணே.

**தோழர் புஸ்பராஜாவுக்கு எம் இதய அஞ்சலிகள்**

ஈழ மக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி -
பத்மநாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி மலையக விஜயத்தின் போது

# ஈ.பி.ஆர்.எல்.எவ் - பத்மநாபா

## கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகள்

வெளியீடு:- 29 இன்- தொடர்ச்சி

09. எட்டு லட்சத்துக்கும் மேல் தமிழர்கள் இன்று மேலைத் தேய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் பெற்றும் தஞ்சம் கோரியும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் அடுத்த தலைமுறையினர் அந்தந்த மேலைநாடுகளின் பிரஜைகளாகி அவற்றின் தேச அடையாளங்கள் மீது பக்தி கொள்ளத் தொடங்கி விடுவர். அவர்களுக்கு இலங்கை அந்நிய நாடாகி விடும். இலங்கையில் இப்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் பலரும் கூட மேலைத் தேய நாடுகளுக்குச் சென்று நிரந்தரமாகக் குடியேறுவற்கான முயற்சிலேயே உள்ளனர். இவையெல்லாம் வெளிநாடு சென்றுள்ள மற்றும் வெளிநாடு செல்லும் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் தமிழர்களுக்கு மட்டுமல்ல மகிழ்ச்சி. தமிழர்களை மெதுமெதுவாக நாடுகடத்துவதன் மூலம் சிங்கள இலங்கையை அடைவது சுலபம் என்று கருதும் சிங்களப் பேரினவாதிகளுக்கும் இதில் மிகுந்த மகிழ்ச்சியே. புலிகளின் தலைமைக்கு இந்தப் புரிதல் இருக்கிறதோ இல்லையோ, புலிகளுக்கு பாசிசமும் பிரிவினை வாதமுமே உயிர்நாடி. மாறாக இலங்கை வாழ். தமிழ் மக்களின் நல்வாழ்வின் மீதும் முன்னேற்றத்தின் மீதும் அக்கறை கொண்ட நாம் இந்தக் குழப்பமான போக்குகளுக்கு தொடர்ந்தும் பங்குதாரர்களாக இருக்கக் கூடாது. மக்கள் விரோத சக்திகளின் அரசியல் நியாயப்படுத்தல்களுக்கு நாம் மறைமுகமாகக்கூட துணை போகாத நிலையை நாம் கொள்வது அவசியமாகும்.

10. சிங்கள இனவாதிகளையும் ஆட்சியாளர்களையும் மிரட்டி தமிழினத்துக்கான உரிமைகளை வென்றெடுத்து விடவேண்டுமென்ற திரு.எஸ். ஜே.வி.செல்வநாயகம் மற்றும் திரு அமிர்தலிங்கம் போன்றவர்கள் ஆரம்பித்த வைத்த அரசியல் என்ன நிலைமையை அடைந்திருக்கின்றது என்பதையறிய நாம் மீண்டும் ஒரு முறை கடந்தகால தமிழரசுக்கட்சி மற்றும் தமிழர் கூட்டணியின் அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்க்க வேண்டியுள்ளது.

ஈழவிடுதலையினூடாக இலங்கை முழுவதிலும் ஒரு அரசியல் சமூகப் புரட்சிக்கு இட்டுச்செல்ல நாம் மேற்கொண்ட முயற்சிகளும் இறுதியில் தமிழர்களின் மத்தியில் பாசிசத்தின் வளர்ச்சியைத் தடுக்க முடியாது போய்விட்டது. நாம் எழுப்பிய விடுதலைக் கோஷம் அதன் அரசியல் சமூக அடிப்படை நியாயங்களையும் அர்த்தத்தையும் இழந்து வெறும் பிரிவினை வாதத்தின் பிடிகளுக்குள் போய்விட்டது.

ஏந்தக் கட்டத்திலும் எமது ஈழவிடுதலைக் கோரிக்கை ஐக்கிய இலங்கையை முற்றாக நிராகரித்த ஒன்றாக இருக்கவில்லை. ஒன்றில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு அல்லது ஈழவிடுதலையினூடாகத் தீர்வு என்பதே அதன் சாராம்சமாகும். ஆனால் இன்று பிரிவினை வாதமானது ஐக்கிய இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியற் தீர்வுக்கான முயற்சிகளைக் கூட இனத் துரோகமென விளக்கமளிக்கப்படும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

புலிகள் என்றைக்கு ரெலோ மீது தாக்குதல் நடத்தி பல நூற்றுக் கணக்கான இளைஞர்களைப் படுகொலை செய்தார்களோ அன்றைக்கே ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது. 1987ல் வடமராட்சியில் அரச படைகளால் தொடங்கப்பட்ட ஒப்பரேசன் லிபரேசன் **(Operation Liberation)** என்ற யுத்தகள முன்னேற்றத்தை எதிர்கொள்ள முடியாமையால் பின்வாங்கிச் சென்ற புலிகளின் தலைமை என்றைக்கு யாழ்ப்பாணத்தின் மண்டைதீவில் இருந்து இந்தியாவுக்குச் செல்ல படகுகளைத் தயார் செய்ததோ அன்றைக்கே ஈழப் போராட்டம் முடிவடைந்தது. இந்தியாவின் விமானங்கள் போட்ட உணவுப் பொட்டலங்கள்தான் தமிழர்களின் போராட்டத்தின் மானத்தைக் காப்பாற்றின என்பதை நாம் பல தடவைகள் எமது வெளியீடுகளில் தெரிவித்திருக்கிறோம்.

இந்தியா பிரிவினையை அங்கீகரிக்கமாட்டாது. இந்தியாவை மீறி இந்தப் பிராந்தியத்தில் உலகின் எந்த நாடும் பிரிவினைக்கு துணை செயயாது என்பதெல்லாம் பொது அறிவு விடயங்களாகும். இது பெரும்பாலான தமிழர்களுக்கும் தெரியும், ஏன் புலிகளுக்கும் கூட அது தெரியாதிருக்க காரணமில்லை. ஆனால் புலிகளால் பிரிவினைக் கோஷத்தைக் கைவிடமுடியாது.

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் படி உருவாக்கப்பட்ட மாகாண ஆட்சியை ஸ்ரீலங்கா அரசு செயலிழக்கச் செய்தபோது நாமும் மீண்டும் ஐக்கிய இலங்கை என்றால் அதிகாரப் பகிர்வு இல்லையென்றால் ஈழப் பிரிவினை என்ற இரு பக்க கோரிக்கையைப பிரகடனம் செய்தோம். அது அன்றைய நிலையில் ஸ்ரீலங்கா அரசுக்கும் மற்றும் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கும், இந்திய மற்றும் சர்வதேச சமூகத்துக்கும் எமது நிலைமையின் அரசியல் நிலைப்பாட்டின் தாற்பரியத்தை புரிய வைக்க அது தேவைப்பட்டது. ஆனால் அதே அணுகுமுறையை அல்லது செய்முறையை 14 வருடங்கள் கடந்தோடிய பின்னர் இப்போதும் மேற்கொள்வது மிகவும் தவறானதாகவும் ஆபத்தானதாகவும் மக்களைத் தவறாக வழி நடத்துவதாகவும் அமையுமெனக் கருதுகிறோம்.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா

ඊළම් ජනතා විප්ලවීය විමුක්ති පෙරමුණ - පත්මනාබා

EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT-PATHMANABHA

### பத்திரிகை அறிக்கை

08-03-2006

புலிகள் மாற்று தமிழ் அமைப்புக்களைத் துணைப் படைகள் அல்லது ஒட்டுப்படைகள் என்று இழிவு படுத்தி அவதூறு செய்து நிந்தனை செய்து வடக்கு கிழக்கை விட்டு மாற்று தமிழ் ஜனநாயக அரசியல் கட்சிகளை வெளியேற்றுவதற்கான சதியில் இறங்கியுள்ளனர். இந்த சதி தொடர்பாக அரசாங்கமும் சர்வதேச சமூகமும் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும் என்று நாம் வினயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இற்றைக்கு 18 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயுத போராட்டத்தில் இருந்து ஜனநாயக அரசியல் கட்சியாக பரிணமித்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க அமைப்பாகும். இக்காலப் பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணசபை, இலங்கை பாராளுமன்றம், உள்ளூராட்சி சபைகளுக்கு ஜனநாயக தேர்தல் வழிமுறைகளினூடாக பிரதிநிதிகளை அனுப்பிய அமைப்பு. இந்த ஜனநாயக முறை உலகளாவிய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சமகால உலகில் மிகவும் ஆர்வத்துடன் வரவேற்கப்படும் ஒரு முறைமையுமாகும். புலிகள் வடக்கு கிழக்கில் பாரம்பரியமான தமிழ் அரசியல கட்சிகளை மாத்திரமல்லாமல் கடந்த இரண்டு தசாப்தங்களிலும் உருவாகி செயற்பட்டு வந்த கட்சிகள் மீது ஈவிரக்கமற்ற படுகொலை தாக்குதல்களை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் விருப்பத்திற்கு அபிலாசைகளுக்கு விரோதமாக அவர்களின் விருப்பதேர்விற்கு விரோதமாக ஏகபிரதிநிதித்துவம் என்ற தமது மா:பியா பாணியிலான ஆட்சியை முழுத் தமிழ் தேசத்தின் மீதும் வலிந்து திணிக்கும் காரியத்தை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஏகபிரதிநித்துவம் ஜனநாயக உணர்வு கொண்டவர்களால், நாடுகளால் நாகரீகமான மனிதகுலத்தால் சகித்துக்கொள்ள முடியாத ஒன்றாகும். அதனை ஈழத்தமிழர்களின் தலையில் கட்டுவதற்கு சர்வதேச சமூகம் அனுசரணையாகிவிடக்கூடாது.

தம்முடன் உடன்படாதவர்கள், ஒத்துப் போகாதவர்கள், கீழ்ப்படியாதவர்கள், அனைவரையும் சமூகவிரோதிகள், தேசத்துரோகிகள், கைக்கூலிகள், துரோகிகள், துணைப்படைகள், ஒட்டுப்படைகள் என்று புலிகள் தூற்றுவது அதன் மூலம் தாம் செய்யும் அக்கிரமம், அநியாயப் படுகொலைகளை நியாயப்படுத்துவது புலிகளின் வரலாறு தெரிந்தவர்களுக்கு ஒன்றும் ஆச்சரியமான விடயமல்ல.

அவர்கள் உள்ளூர் மாற்று தமிழ் தலைமைகளுக்கு எதிராக மாத்திரம் இத்தகைய படுகொலைகளை கட்டவிழ்த்து விடவில்லை. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒன்றரை நூற்றாண்டு மேற்பட்ட வரலாற்றையுடைய இந்திய காங்கிரஸ் கட்சியின் இளம் தலைவர், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் உள்ளிட்ட தலைவர்கள் பலரை அவர்கள் அழித்தொழித்திருக்கிறார்கள். சிங்கள மக்களின் தலைவர்களான காமினி திசாநாயக்கா, பிரேமதாசா போன்றவர்களை அவர்கள் படுகொலை செய்திருக்கிறார்கள். சுமார் 800 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களுடன் ஒன்றாக வசித்து வந்த முஸ்லீம் மக்களை, மொத்த முஸ்லீம் சமூகத்தையே ஒற்றர்கள் என்று பழி சுமத்தி யாழ்ப்பாணத்திலிருந்தும், வடக்கின் ஏணைய பகுதிகளில் இருந்தும் உடுத்த துணியுடன் வெளியேற்றி இருக்கிறார்கள்.

ஒரு தலைமுறையைச் சேர்ந்த தமிழ் தலைவர்களில எவரையாவது புலிகள் விட்டு வைத்ததாக யாராவது சான்று பகர முடியுமா?

எனவே புலிகள் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆடாமல் சர்வதேச சமூகமும் இலங்கை அரசும், விழிப்புடன் செயற்பட வேண்டும். புலிகளின் ஒட்டுப்படை புரளியை யாராவது ஒப்புக்கொள்வார்களானால் அவர்கள் புலிகள் மேற்கொண்ட இத்தகைய அக்கிரமங்கள் அத்தனையையும் ஒப்புக்கொண்டதென்றே பொருள்படும்.

மாற்று அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல, அவர்களுக்கு எதிரான, அவர்கள் எதிரிகளாக கருதும் கல்விமான்களை, அரச அதிகாரிகளை, சாதாரண மக்களை ஈவிரக்கமின்றி இதேபோன்று பல்வேறு அவதூறுகளை சுமத்தியே கொன்றொழித்திருக்கிறார்கள். இந்த தகவல் தொழில்நுட்ப யுகத்தில் புலிகளின் புரளியை, புலுடாவை யாரும் நம்புவார்களாக இருந்தால் அவர்கள் ஒன்றில் முட்டாள்களாக இருக்க வேண்டும், இல்லாவிடில் அவர்களின் நடத்தையில் உள்நோக்கம் இருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

2002 பெப்ரவரி மாதத்தில் இருந்து இன்றுவரை புலிகள் எத்தனை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள், படையினர் எத்தனை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள், வெவ்வேறு கட்சிகள் எத்தனை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள் என்ற தகவல்கள் எல்லாம் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு, இலங்கையின் மனித உரிமை செயலகத்தின் ஆவணங்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் அறிக்கைகள், பொலிஸ் முறைப்பாடுகள் எல்லாவற்றிலும் விரவிக்கிடக்கின்றன. கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. புலிகள் நடத்திய படுகொலை வெறியாட்டம் வரம்பற்றது. எனவே இவற்றையெல்லாம் சீர்தூக்கியே புலிகளின் உள்நோக்கத்தை புரிந்து கொள்ள முற்பட வேண்டும்.

இது யாருக்கும் புரியாததொன்றல்ல. பிரபாகரனின் அதிகார வெறி தமிழ் மக்கள் மீது அளவு கடந்த சர்வாதிகாரத்தை திணிப்பதற்கான நப்பாசை ஒன்றே இதில் அடங்கியிருக்கிறது.

புலிகளின் மக்கள் மீதான நம்பிக்கையீனமே புலிகளை இவ்வாறு கோரிக்கை விடத் தூண்டுகிறது. தமிழ் மக்களுக்கு ஜனநாயக சுதந்திரம் அனுமதிக்கப்படுமானால் அது தமக்கு பெரும் அச்சுறுத்தலாகிவிடும், சாவுமணியாகிவிடும் என்பதே புலிகளின் பீதியாகும்.

பல ஆயிரக்கணக்கான மனிதர்களை கொன்றொழித்து வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் தமிழர்களிடம் அச்சுறுத்தியும், அழுத்தம் கொடுத்தும், அபகரித்தும் பெற்றுக் கொண்ட பண பொருளாதார ஆதாயங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், சிறுவர் சிறுமியரை கேட்பாரின்றி யுத்தத் தேவைகளுக்காக பிடித்துச் செல்ல வேண்டுமானால், முழு மக்கள் சமூகத்தையுமே மந்தைக் கூட்டங்களாக நடத்த வேண்டுமானால் தட்டிக் கேட்பதற்கு, இந்த அராஜகங்களை எதிர்த்து குரல் கொடுப்பதற்கு யாரும் வடக்கு கிழக்கில் இருக்கக்கூடாது. அதற்காகவே புலிகள் மாற்று தமிழ் கட்சிகளை துணைப்படைகள் என்று அவதூறு செய்து வடக்கு கிழக்கை விட்டு வெளியேற்றுவதற்கான விபரீத முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த விபரீதத்தை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். புலிகளின் ஜனநாயக விரோத நோக்கங்களுக்கு உடந்தையாகி விடக்கூடாது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை பொறுத்தவரை தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசையான இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காகவும், தமிழர்கள் மத்தியில் ஜனநாயகத்தை உருவாக்குவதற்காகவும் ஆயிரக்கணக்கான தோழர்களை தியாகம் செய்த கட்சி. 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கில் மாகாண அரசொன்றை நிறுவுவதற்காக தன்னை அர்ப்பணித்த கட்சி. சமூகத்தில் நிகழும் சகலவிதமான ஏற்றத் தாழ்வுகளையும் களைந்தெறிய புறப்பட்ட கட்சி. கள்ளக்கடத்தல் பேர்வழியான பிரபாகரனும் அவனது கூட்டாளிகளும், பாலசிங்கம் போன்ற நாலாந்தர பேர்வழியும் இந்த கட்சியை பற்றி பேசுவதற்கு எந்த அருகதையும் அற்றவர்கள் என்பதை சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அரசுக்கும் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். புலிகளிடமிருந்து எங்களுக்கு எந்த புனிதர் பட்டமும் எங்களுக்கு தேவையில்லை. அப்படியேதும் வழங்கப்படும் எனில் நாம் உண்மையிலேயே தவறான மனிதர்களே.

புலிகள் கிளப்பிவிட்டுள்ள வம்புப் புரளியில் சர்வதேச சமூகமும் இலங்கை அரசும் காலத்தை விரயமாக்குவது ஆரோக்கியமான விடயமல்ல. அது தமிழர்களையும், ஒட்டு மொத்த இலங்கையர் சமூகத்தையும் நரக படுகுழியில் தள்ளுவதாகவே அமையும். இது மிகவும் அபாயகரமான ஒரு விளையாட்டு என நாம் எச்சரிக்க விரும்புகிறோம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்பது வடக்கு கிழக்கில் ஜனநாயகத்தையும் பலகட்சி செயற்பாடுகளுக்கான உத்தரவாதங்களையும் மனித உரிமைகளையும் உள்ளடக்கியதாக திருத்தியமைக்கப்பட வேண்டும்.

புலிகள் தாம் எவ்வளவுக்கு எவ்வளவு அட்டூழியம் புரிகிறார்களோ அந்தளவுக்கு மக்களும் சர்வதேச சமூகமும் அரசும் இறங்கிவருவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள் கடந்த கால் நூற்றாண்டுகளாக இவ்வாறுதான் அவர்கள் செயற்பட்டு வருகிறார்கள். அதாவது அழிச்சாட்டியம், அட்டூழியங்கள் ஊடாக தமது அகங்கார அதிகார கொலை வெறி அபிலாசைகளை பூர்த்தி செய்வது.

சமாதானம் உருவாக வேண்டும் என்பதற்காக மனித உரிமை ஜனநாயகத்தை புலிகளின் காலடியில் சரணாகதியடைய வைக்க முடியாது. அது உண்மையான சமாதானமாகவும் இருக்க முடியாது. நாங்கள் உலகில் சுதந்திரமான நாகரீகமான மக்கள் போல் வாழ விரும்புகிறோம். காட்டு மிராண்டிகளாக அல்ல. காட்டுமிராண்டிகளுக்கு அடிபணிந்தும் அல்ல.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வாய் பெற்றுக் கொடுப்பதற்காகவும், வடக்கு கிழக்கில் ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதி செய்வதற்காகவும், இலங்கையின் சகல சமூகங்களிடையே சமத்துவமான ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகவும் இடையறாது போராடும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தி. ஸ்ரீதரன்
பொதுச் செயலாளர்
ஈ.பி.ஆர்.எல்.எப் - பத்மநாபா

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குருமன்காடு, வவுனியா. அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org